பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 31 வியாழக்கிழமை 13.06.2024 கதிர் 218

# ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புபட்ட புதிய விசாரணைக் குழு நியமனம்

## புலனாய்வுத் தகவல்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விசாரிக்கும்

2019 ஏப்ரல் 21 நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு (ஈஸ்டர்) குண்டுத்தாக்குதல்தொடர்பான முழுமையான புலனாய்வுத் தகவல் குறித்து அரச புலனாய்வுச் சேவை,தேசிய புலனாய்வு பிரதானி மற்றும் ஏனைய அதிகாரிகள் முன்னெடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் விசாரணை ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் வந்திருக்கும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்றஉறுப்பினருமானவிக்னேஸ்வரனைஅவரது இல்லத்தில்சந்தித்துப் பேசினார். அவரிடமும் தான் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவேன் என்பதை நேரில் தெரிவித்தார்.

சஜித் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவது குறித்துப் பேசவில்லை அவரும் 13 மைனஸ் குறித்துத்தான் கூறுகிறார் என்கிற சர்ச்சையைக் கிளறி விட்டவரே விக்னேஸ்வரன்தான். யாழ்ப்பாணம் வந்த ரணில் விக்கிரமசிங்க அவரைச் சந்தித்துப் பேசியபோது, இந்தக் கருத்தைத் தெரிவித்தார் என்று விக்னேஸ்வரன்கூறியிருந்தார். இந்த விடயத்தைசஜித்திடம்நீங்களேநேரில் கேட்டு அறிந்துகொள்ளுங்கள் என்று வேறு ரணில் அறிவுறுத்தியிருந்தார் என்றும் கூறியிருந்தார்.

நேற்றையசந்திப்பில்தனது ☞2

## 15 புதிய சட்டங்கள் வரும் வாரங்களில்

எதிர்வரும் சில வாரங்களில் சுமார் 15 மிக முக்கியமான சட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

கடந்த 18 மாதங்களில் சுமார் 75 சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு நாட்டுக்குத் தேவையான அடிப்படை மாற்றங்களைச் செய்ய முடிந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் ☞9

## ஊடகவியலாளரின் வீடு மீது தாக்குதல்





யாழ்ப்பாணம் - அச்சுவேலி பகுதியை சேர்ந்த ஊடகவியலாளர் பிரதீபனின் வீட்டின் மீது வன்முறை கும்பல் இன்றுஅதிகாலைபுகுந்து தாக்குதல்நடத்தியுள்ளது. வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களையும் வன்முறைக் கும்பல் தீ வைத்துக் கொழுத்தியுள்ளது.

அச்சுவேலி, பத்தமேனி காளி கோவில் பகுதியில் உள்ளது பிரதீபனின் வீடு. வியாழக்கிழமை அதிகாலை 12.15 மணியளவில், இரண்டுமோட்டார் ☞9

## நினைவேந்தல்கள் குறித்து ஆராயந்த குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம்

### நேற்றுக் கையளிப்பு

இலங்கையில் ஆயுத மோதல்கள்,அரசியல்அமைதியின்மை அல்லது உள்நாட்டுக் கலவரம் காரணமாக உயிரிழந்தவர்களைநினைவுகூருவது குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

சிரேஷ்ட பேராசிரியர் ஜகத் வீரசிங்க, கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழக பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர, யாழ் பல்கலைக்கழகப்பேராசிரியர் டி.சனாதனன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பர்ஸானா ஹனீபா,தேசியஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க ☞2

## முன்பள்ளி ஆசிரியர்கள் கொடுப்பனவு இரட்டிப்பு

### மகிந்த ராஜபக்ச தெரிவிப்பு

அண்மையில் நடைபெற்ற அரசசெலவீனங்கள் தொடர்பான அமைச்சரவை உபகுழுவில், சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க முன்வைத்த யோசனை குறித்து ஆராய்ந்து, நாட்டில் உள்ள அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படும் 2500 ரூபாய் மாதாந்த கொடுப்பனவை 5000 ரூபாயாக அதிகரிக்க அமைச்சரவைஅனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப்பேச்சாளரும்வெகுஜன ஊடகத் துறை அமைச்சருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் ☞2

## ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்




சம்பள முரண்பாட்டைத் தீர்க்கவலியுறுத்தி நாடு முழுவதும் நேற்று ஆசிரியர்கள், அதிபர்கள் பாடசாலைகள் மற்றும் வலயக் கல்விப்பணிமனைஎன்பவற்றுக்குமுன்பாகவும்பொது இடங்களிலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசபாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்களுக்கு சுபோதினிஅறிக்கையின் படி மூன்றில் இரண்டு பங்குசம்பளநிலுவையை வழங்க கோரி இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

ஒன்றிணைந்த அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பினர் ☞2

## இலங்கை தோற்கடிக்கப்படுமா என்பதே அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் முடிவு

### இப்படிச் சொல்கிறார் ரணில் விக்கிரமசிங்க

இந்தத் தேர்தலில் தீர்மானிக்கப்படுவது எனது வெற்றி தோல்வி அல்ல. நாடு தோற்கடிக்கப்படுமா? இல்லையா? என்பதே தீர்மானிக்கப்படும். தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி பொருளாதார வேலைத்திட்டத்தை முன்வைத்துள்ளோம். அதை நடைமுறைப் படுத்தவே பொருளாதார மாற்ற சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அது சரிந்தால் மீண்டும் அந்நியச்செலாவணியை நாம் இழக்க நேரிடும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று நடைபெற்றபொருளாதார மறுசீரமைப்புக்கான நாடாளுமன்றதுறைசார் மேற்பார்வை குழுவில் பங்கேற்கும் இளைஞர், யுவதிகளுடனான கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞9

## அமைச்சரவையின் அனுமதி கிடைத்தது

சுற்றுலாத்துறைக்கு தேவையான வாகனங்களை இறக்குமதிசெய்வதற்கானவிதிமுறைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டின் இரண்டாவது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்குமுறையின்படி, இலங்கைக்கான மோட்டார் வாகனங்களை இறக்குமதி செய்வது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட் டுள்ளது.

ஆனால் சுற்றுலா மற்றும் காணி அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட யோசனையின் பிரகாரம், 250 சிறிய பேருந்துகள் மற்றும் 75 வேன்களை ☞8

## அத்தியாவசிய சேவையாளர்களுக்கே சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளதாம்

### சட்ட மா அதிபர், பாதுகாப்பு பிரதானி பதவிகள் குறித்து அரச தரப்பு விளக்கம்

சில அத்தியாவசிய சேவைகளைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமே சேவை நீடிப்புவழங்கப்பட்டுள்ளதாகவும், அது பாரம்பரியமாகத் தொடரும் நிலை அல்ல என்றும் அமைச்சரவைப்பேச்சாளர், வெகுஜன ஊடகத் துறைஅமைச்சர்கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைதீர்மானங்களைஅறிவிக்கும்செய்தியாளர்கள் சந்திப்பின் போது, சட்டமா ☞2

## கடலில் தத்தளித்த அனலைதீவு மீனவர்கள் இந்தியாவில் மீட்பு

### நன்றி தெரிவித்தார் சங்கப் பிரதிநிதி

யாழ்ப்பாணம் - அனலைதீவில் இருந்து கடற்றொழிலுக்குச் சென்றுகாணமல்போன இரு மீனவர்களளும் இந்தியாவின் தமிழ்நாட்டில் கரையொதுங்கியுள்ளனர்.

அனலைதீவைச் சேரந்த திருச்செல்வம் மைக்கல்பெனாண்டோ, நாகலிங்கம்விஜயகுமார் என்ற இருவருமே படகு இயந்திரம் பழுதாகி தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் பகுதியில் கரையொதுங்கியுள்ளனர்.

அவர்கள் இருவரிடம் இந்தியப் பொலிஸார் மற்றும் கரையோர காவல்படையினர்விசாரணைகளை நடத்தினர்.

அனலைதீவில் இருந்து ☞8

## இனி இது .....

நிலைப்பாட்டைவிக்னேஸ்வரனிடம் தெளிவுபடுத்தினார் சஜித். நியாயப்படி, சஜித் அப்படிக் கூறியதைத்தான் ஊடகங்களிடம் பெரிதாக எடுத்துக்கூறியிருக்க வேண்டும் விக்னேஸ்வரன். ரணில் விக்னேஸ்வரனிடம் சொன்னதற்கு மாறாகத் தனது நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்தியதற்காக சஜித்தைப் பாராட்டியிருக்கவேண்டும். ஆனால், போகிறபோக்கில்சஜித்தின்கருத்தை வெளிப்படுத்திய விக்கி காணி, பொலிஸ் அதிகாரங்கள் குறித்த முழுமையான அறிக்கையை சஜித் வெளிப்படுத்தவேண்டும்என்றுதான் முன்வைத்த கோரிக்கையைத்தான் ஊடகங்களிடம் பெரிதுபடுத்தினார். அதாவது அவருக்கு சஜித்தின் நிலைப்பாடு மீது இன்னமும் சந்தேகங்கள் இருக்கின்றதாம் என்பதுதான் அதன் அர்த்தம். ரணில் சொன்னதன்படி அவருக்கு இன்னமும் கொஞ்ச நஞ்ச சந்தேகங்கள் இருக்கத்தான் செய்கின்றது.

(சஜித் தெற்கில் சிங்களப் பேரினவாதத்திற்கு ஒரு முகமும் தமிழர்களுக்கு ஒரு முகமுமாக 13 விடயத்தில் வழக்கமான சிங்கள அரசியல்வாதிகளின்விளையாட்டை ஆடுகின்றார் என்பது குறித்து நேற்றே இப்பத்தியில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன். அதுவேறு விடயம். விக்னேஸ்வரன் - ரணில் - சஜித்இடையிலானஇந்தவிடயத்தின் உள்ளடக்கம் வேறுவிடயம்)

சஜித்தின் சந்திப்புக் குறித்து விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் வந்துள்ள சஜித் பிரேமதாஸ என்னையும் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது பல்வேறு விடயங்கள் தொடர்பில் இருவரும் பேசினோம்.

குறிப்பாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாகத் தான் நடைமுறைப்படுத்தப் போவதாக அவர் கூறினார். தமிழ் மக்களுக்குத்தான்எதனைச்செய்யப் போகின்றேன் என்பதை எனக்குக் கூறிவிட்டு செல்வதற்காகவே என் வீட்டுக்கு வந்தார் எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும், தான் எதனைத் தருவதாக வாக்குறுதி வழங்குகின் றேனோ அதனைத் தருவதற்குச் சகல முயற்சிகளையும் எடுத்து நிச்சயம் தருவேன் என்றும் அவர் கூறினார். ஆனால், தமிழ் மக்களின் பிரச்சினைக்குஉண்மையானதீர்வு என்ன வெனில் நாட்டில் இருக்கும் ஒற்றையாட்சி அரசமைப்பை முற்றாக மாற்றுவதுதான் என நான் கூறினேன்.

13 தருவேன், தருவேன் என்று மீண்டும் மீண்டும் கூறுகின்றீர்கள், எதனைத் தரப் போகின்றீர்கள்? எவ்வாறான அதிகாரங்களைத் தரப் போகின்றீர்கள்?என்று அவரிடம் நான் கேட்டேன்.

அத்தோடு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை என்னவாகக் கொடுப்பதாக நீங்கள் உத்தேசித்துள்ளீர்கள் என்பது சம்பந்தமாக முழுமையான ஓர் அறிக்கையை நீங்கள் வெளியிட் டீர்களானால் உங்களுடைய மனதிலே என்ன இருக்கின்றது என்பதைப் பற்றி நாங்கள் முழுமையாக அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும் எனக் கூறினேன் -என்றார்.

சஜித் விக்னேஸ்வரனை மட்டு மல்ல ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரனையும் சந்தித்துப் பேசினார். வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள வேட்பாளர்கள் அனைவரையும் நிராகரித்துவிட்டு தமிழ் பொது வேட் பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்பதில் மும்முரமாக நிற்பவர்களில் ஒருவர் சுரேஸ். அரசியல் பொதுவெளியில் பொது வேட்பாளர் பற்றிய கலந்துரையாடலைத் தொடக்கி யவரும் அவரே. எனவேதான் அவரைச் சந்தித்துப் பேசினார் சஜித். 13ஐ நடைமுறைப்படுத்துவது குறித்த தனது நிலைப்பாடு மற்றும் ஜனாதிபதித் தேர்தல் அறிக்கை தொடர்பில் அவர் இந்தச் சந்திப்பில் விளக்கினார். அதேநேரம்தமிழ்பொது வேட்பாளர் என்ற நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் முன்வைத்தார் என்றும் தெரிகிறது.

பதிலளித்த பிரேமச்சந்திரன், சிங்களத்தலைவர்களாகதமிழர்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வந்ததே தமிழ் பொது வேட்பாளருக்கான தேவையை ஏற்படுத்தியதாகத் தெரிவித்திருக்கிறார். இந்தச் சந்திப்புக் குறித்து பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது:

இதன்போது கடந்த காலங்களில் தமிழ் மக்கள் எவ்வாறு ஏமாற்றப் பட்டிருக்கின்றோம் என்பதை விலாவாரியாக அவருக்கு நாங்கள் விளங்கப்படுத்தியிருக்கின்றோம்.

நாங்கள் ஏன் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டி ஏற்பட்டது என்பதையும், அது எவ்வாறு எங்கள் மேல் திணிக்கப்பட்டது என்பதையும் நாங்கள் சொல்லியிருக்கின்றோம்.

அரசியல் சாசனத்தில் உள்ளவற் றைக்கூட நிறைவேற்றாமல் போனதும் வெறுமனே தொடர்ந்தும் நல்லிணக்கம் நல்லிணக்கம் என்று பொய்களைப் பேசிக் கொண்டிருப் பதும்தான் அதற்குக் காரணம் என்பதைத் தெளிவுபடுத்தியி ருக்கின்றோம்.

தமிழ்பொதுவேட்பாளரைநிறுத்த சிவில்சமூகங்களும்தமிழ்த்தேசியக் கட்சிகளும்ஆதரவுவழங்கித்தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துகின்ற செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றனஎன்பதையும்அவரிடம் கூறியுள்ளோம் -என்றார்.

இதற்கிடையில் கொழும்பில் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை நேற்று சந்தித்துப் பேசி இருக்கிறார். தமிழ் பொது வேட்பாளரை முற்றாக நிராகரித்து ஞாயிற்றுக்கிழமை சுமந்திரன் கருத்துத் தெரிவித்த பின்னணியில் இந்தச் சந்திப்பு திடீரென நடந்துள்ளது. தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதன் பின்னணியில் இந்தியா இல்லவே இல்லை என்று சொல்லப்படும் நிலையில் இந்தியா சுமந்திரனிடம் என்ன சொன்னது என்பது வெளியே தெரியவந்தால் நல்லது.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## ஈஸ்டர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.என்.டி.அல்விஸ்தலைமையிலான குழுவை நியமித்துள்ளார்.

இந்தக் குழுவில், சக உறுப்பினர்களாகஇலங்கைநிர்வாகச் சேவையின் விசேட தரநிலை அதிகாரியானகே.என.கே. சோமரத்ன மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி டபிள்யூ.எம்.ஏ.என்.நிஷேன் ஆகியோரும் உள்ளடங்குகின்றனர்.

இந்த விசாரணைக் குழுவின் செயலாளராக ஜனாதிபதியின் சிரேஷ்ட உதவி ஆலோசகர் சாரதாஞ்சலி மனோகரன் நியமிக் கப்பட்டுள்ளார்.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பான முழுமையான புலனாய்வுத் தகவல் குறித்து அரச புலனாய்வுச் சேவை, தேசிய புலனாய்வு பிரதானி மற்றும் ஏனைய அதிகாரிகள் முன்னெடுத்த நடவடிக்கைகள் எவை? அதற்கு அமைவாக போதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா? என்பது குறித்தும் ஆராயப்படவுள்ளது.

ஈஸ்டர்தாக்குதலுக்குமுன்னதாக வவுணத்தீவில்பொலிஸ்அதிகாரிகள் இருவர் விடுதலைப் புலிகள் அமைப்பினரால் கொல்லப்பட்டனர் என்று இராணுவ புலனாய்வுச் சபை, குற்றப் புலனாய்வு பிரிவு என்பன நான்கு மாதங்களாக நம்பியிருந்தமைக்கான காரணம் என்னவென்றும், மேற்படி சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு பிரிவின் விசாராணைகளில் தெரியவந்த தகவல்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளது.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் குறித்தவிசாரணைஅறிக்கைஅல்லது அது தொடர்பிலான விசாரணை ஆணைக்குழுக்களினால் 2021 ஜனவரி 31 ஆம் திகதி வழங்கப்பட்ட இறுதி அறிக்கையின் ஊடாக 2019 ஏப்ரல்21ஆம்திகதிநடத்தப்படவிருந்த குண்டுத் தாக்குதல் தொடர்பாக அரச புலனாய்வுபிரிவு, தேசியபுலனாய்வுப் பிரதானி மற்றும் ஏனைய அதிகாரிகளுக்குஇந்தியபுலனாய்வுப் பிரிவினால் முழுமையான முன்னோடி அறிக்கையொன்று வழங்கப்பட்டிருந்தாக குறிப்பிடப்பட் டுள்ளது.

2018 நவம்பர் 30 அல்லது அதற்கு அண்மைய காலப்பகுதியில் வவுணதீவில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் கொலைச் செய்யப்பட்ட சம்வம் தொடர்பில் இராணுவ புலனாய்வுப் பணியகம், குற்றப் புலனாய்வு பிரிவு என்பன அறிந்துகொண்ட தகவல்கள் அறிவிக்கப்பட்டிருந்ததோடு, அதில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு தொடர்பிருப்பதாக நம்பப்பட்டது.

இருப்பினும் மேற்படி சம்பவத்திற்கு ஆறு மாதங்களுக்கு பின்னர் இராணுவ புலனாய்வுப் பணியகம் இதில் தேசிய தவ்ஹீத் ஜமாத்அமைப்புக்குதொடர்பிருப்பதாக அறிந்துகொண்டது.

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பில் அறிக்கையிடல் மற்றும் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழு 2021 ஜனவரி 31 இறுதி அறிக்கை அடங்கிய இறுவட்டு ஒன்றை விசாரணை ஆணைக்குழுவிடம் வழங்கியிருந்தது, அது தொடர்பில் எந்தவொரு அதிகாரியிடமும் விசாரணை நடத்தும் அதிகாரத்தை புதிய விசாரணைக் குழுவிற்கு ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

2024 செப்டெம்பர் 15 அன்றைய தினத்திற்குமுன்னதாகபுதியகுழுவின் அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடு செய்திருந்த இந்த கவன ஈர்ப்புநடவடிக்கையில் ஆங்காங்கே பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்களும் அதிபர்களும் பங்குபற்றினர்.

பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை முடித்துகொண்டு மாலை 2.30 மணிக்கு மேல் வீதிக்கு இறங்கிய அதிபர் ஆசிரியர்கள் தமது கோரிக்கைகளை எழுதிய பதாதைகளை கையில் ஏந்தி அரசுக்கும், கல்வி அமைச்சுக்கும் அழுத்தம் கொடுக்கும் வகையில் கோஷங்களை எழுப்பி போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைப் பெறுபேறுகளைத் திருத்தும் பணிகளில் ஈடுபட்டிருந்த ஆசியர்களும் தமது பணிகளை நிறுத்திவிட்டு இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. அரசு இந்தவிடயத்தில் தொடர்ந்தும்பாராமுகமாகஇருந்தால் ஜூன் 26 அன்று கொ-ழும்பில் கல்வி அமைச்சு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர் என்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.(100)

## நினைவேந்தல்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் துஷாரி சூரியாராச்சி, நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேலதிகப் பணிப்பாளர் நாயகம் மஹிந்த விதானராச்சி ஆகியோர் உள்ளடங்கிய குழு இதற்கென நியமிக்கப்பட்டிருந்தது.

22-.05.-2023 எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின்படி ஜனாதிபதிரணில்விக்ரமசிங்கவினால் இந்தக் குழு நியமிக்கப்பட்டது. 1983 முதல் 2009 வரையான காலகட்டத்தில் இலங்கையில் நடந்த ஆயுத மோதல்கள், அரசியல் அமைதியின்மை அல்லது உள்நாட்டுக் கலவரங்கள் என்பவற்றினால் உயிரிழந்த பொதுமக்கள், ஆயுதப்படை உறுப்பினர்கள், பொலிஸார், முன்னாள் போராளிகள் உட்பட அனைவரையும் நினைவுகூரும் வகையில் ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தின் அடையாளமாக நினைவிடமொன்றை அமைப்பது குறித்து இந்தக் குழு ஆய்வுசெய்தது.

இதற்காக, நிபுணர் குழு கடந்த நாட்களில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் பொதுமக்களின் கருத்துக்களைப் பெறும் அமர்வுகளை நடத்தியதுடன், ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான நிபுணர்களுடன் ஆலோசனைகளையும் நடத்தியது.

இந்த பொதுமக்கள் அமர்வுகள் அந்தந்த பகுதிகளில் பணியாற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் தேசிய ஒருங்கிணைப்பு அதிகாரிகளினால் ஒருங்கிணைக்கப்பட்டன. பங்குபற்றிய மக்களுக்கு தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்கத்திற்கான தமது அபிலாஷைகள், யோசனைகள் மற்றும் முன்மொழிவுகளை வெளிப்ப டையாகவும் சுதந்திரமாகவும் முன்வைக்கவாய்ப்புவழங்கப்பட்டது.

நினைவேந்தல் செய்வதற்கான மக்களின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று குழு வலியுறுத்தியதோடு பல்வேறு குழுக்களும் தனிநபர்களும் நினைவேந்தல் மற்றும் நல்லிணக்க நிகழ்வுகளை வெவ்வேறு வழிகளில் முன்னெடுப்பதையும் இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. வளமான அறிவுக் கட்டமைப்பையே இது வெளிப்படுத்துவதாக சுட்டிக்காட்டியுள்ள நிபுணர் குழு, நாட்டின் மோதல்கள் தொடர்பான கடந்த காலத்தைப் பற்றி அறிக்கையிடவோ, கருத்துத் தெரிவிக்கவோ அல்லது வேறுவிதமாகக் கையாளும் முயற்சியின் போது இந்தப் பங்களிப்புகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அறிக்கை தெளிவுபடுத்தியுள்ளது.

இந்த சந்திப்புகளின் போது முன்வைக்கப்பட்ட பரந்த அளவிலான யோசனைகளை பரிசீலித்த பின்னர் இந்தக் குழு பல பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. இலங்கையின் மோதல்கள் மற்றும் நல்லிணக்க முயற்சிகளுடன் உருவான கலை மற்றும் கலாச்சார வெளிப்பாடுகளை பாதுகாத்து வைக்கும் குறியீட்டு ரீதியிலான கட்டடமொன்றை அமைக்கவும் குழு பரிந்துரைத்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்காக கூட்டு அர்ப்பணிப்பை உறுதி செய்வதும் அனைத்து இலங்கையர் களிடையே நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும். குழுவின் அறிக்கையைக் கையளித்த போது ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் உடன் இருந்தார்.

## முன்பள்ளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை மற்றுமொரு குழுவில் வழங்கியி ருந்தார் எனவும், அதற்கமைய 8700 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 5000 ரூபா கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.




காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பு திடக்கழிவுத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைவு

## ஒகஸ்ட் முதல் செயல்பாடுகள்







கொழும்பு பெருநகர திடக்கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளன எனவும் அதன் செயற்பாடுகள் ஒகஸ்ட் மாதத்திற்குள் ஆரம்பிக்கப்படும் எனவும் கொழும்பு மாநகர கழிவு முகாமைத்துவ திட்டத்தின் பணிப்பாளர் சரத் பண்டார தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் பரீட்சார்த்தப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த ஒத்திகை சோதனைகள் கடந்த 05ம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த திட்டம் 2014 இல் அப்போதைய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நகர்ப்புற திடக்கழிவு அகற்றல் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில், புத்தளம் அருவக்காலு பகுதியில் உள்ள கைவிடப்பட்ட குழிகள், சுகாதார கழிவுகளை அகற்றும் வசதி மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பை நிர்மாணிக்கும் பணியை நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது. களனி மற்றும் புத்தளத்தில் 02 கழிவுப் பரிமாற்ற நிலையங்களை நிர்மாணிப்பதும் அது தொடர்பான புகையிரத உட்கட்டமைப்பு மற்றும் வீதி அமைப்பும் இதன் கீழ் இடம்பெற்றது.

கொழும்பு பெருநகரத்தைச் சுற்றி சேகரிக்கப்படும் 1200 மெற்றிக் தொன் குப்பைகளை களனி குப்பை பரிமாற்ற நிலையத்திற்கு கொண்டு வந்து சுருக்கி கொள்கலன்களில் அடைத்து புகையிரதத்தில் கொண்டு சென்று அருவக்காலுவில் சுகாதாரமான முறையில் அப்புறப்படுத்த இந்த திட்டம் முதலில் திட்டமிடப்பட்டது. எவ்வாறாயினும், மேல் மாகாணத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களால் அகற்றப்படும் எஞ்சிய கழிவுகள் அனைத்தும் சுகாதாரமான முறையில் அகற்றப்படும் வகையில் இந்த வசதிகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

திட்டத்தின் மொத்த செலவு 130 மில்லியன் அமெரிக்க டொலர்கள். களனி இடமாற்ற நிலையத்திலிருந்து அருவககாலு குப்பைக் கிடங்குக்கு புகையிரதத்தில் குப்பைகளை கொண்டு செல்வதற்காக புகையிரத 04 இன்ஜின்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகள் தொடங்கும் வரை பயணிகள் போக்குவரத்திற்கு பயன்படுத்த புகையிரத திணைக்களத்திற்கு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. குப்பை போக்குவரத்துக்கு தேவையான 94 கொள்கலன் பெட்டிகள் வாங்கப்பட்டுள்ளன. களனியிலிருந்து அருவக்காலுக்கு குப்பைகளை கொண்டு செல்வதற்கு தேவையான 17 புகையிரத வண்டிகள் திருத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பின்னர், திட்டத்தின் ஒப்பந்ததாரர்கள் 03 மாத காலத்திற்கு தொழில்நுட்ப வல்லுனர்களுக்கு பயிற்சி அளித்து, குப்பை சேகரிப்பு முறத்தின் செயல்பாட்டை மேற்பார்வையிடுவார்கள். அருவக்காலு குப்பைத் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை சீன நிறுவனமான சைனா ஹார்பர் இன்ஜினியரிங் நிறுவனம் மற்றும் சீனாவின் சௌத்வெஸ்ட் முனிசிபல் இன்ஜினியரிங் அண்ட் ரிசர்வ் இன்ஸ்டிடூட் ஒப் சைனா நிறுவனம் ஆகியவை மேற்கொண்டன. தற்போது, 140 ஏக்கர் பரப்பளவில் அருவக்காலுவில் கழிவு சேமிப்பு மையம் மற்றும் 20 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள வனவாசல கழிவு பரிமாற்ற மையம் ஆகியவற்றின் பணிகளும் நிறைவடைந்துள்ளன.

அதன்படி, இத்திட்டம் மார்ச் 31 ஆம் திகதிக்குள் முடிக்கப்பட்டது. கோவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, ஒரு வருடத்திற்கும் மேலாக திட்டம் நிறுத்தப்பட்டது. அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைவாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தை நிறைவு செய்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 5,500 மில்லியன் ஷரூபா. இந்த நாட்களில் திட்ட இயக்குனர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி மற்றும் ஒத்திகை சோதனைகள் முடிந்தவுடன் திட்டத்தை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாக திட்ட இயக்குனர் தெரிவித்தார். இதற்காக மூன்று புதிய முதலீட்டாளர்கள் முன் வந்துள்ளனர். முதலீட்டாளர்களில் ஒருவரை தெரிவு செய்வதற்கான யோசனையும் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பணிப்பாளர் தெரிவித்தார்.

(05)

# அம்பாறை பெரமுன உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவு



(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட மொட்டு கட்சி உறுப்பினர்கள் சிலர் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன்னிலையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டனர்.

இந் நிகழ்வு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி செயலக காரியாலயத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது .

ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்துவத்தை ஏற்றுக்கொண்டு சுமார் 30 பேர் இணைந்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி இணை தொகுதி அமைப்பாளரும், கல்வி அபிவிருத்தி சங்கத்தின் இணைப்புச் செயலாளரும், ஐக்கிய இளைஞர் சக்தியின் மாவட்ட செயலாளருமான வெள்ளையன் வினோகாந்த் விடுத்த அழைப்பை ஏற்று அம்பாறை மாவட்டத்திற்குரிய மொட்டு கட்சியின் பிரதிநிதிகளான தமன பிரதேச சபையைச் சேர்ந்த முன்னாள் உபதவிசாளர் வெனுர பிரகீத், நாமல் ஓய பிரதேச சபையைச் சேர்ந்த உறுப்பினர் டபிள்யூ .விஜேவந்த, உகன பிரதேச சபையைச் சேர்ந்த உறுப்பினர்.ரவீந்ர ருபசிங்க மற்றும் விமலவீர திசாநாயக்க முன்னாள் அமைச்சருடைய அமைச்சரவை ஊழியர்கள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் ஜானக கசும் உட்பட மொட்டு கட்சியினுடைய வேட்பாளர்கள், கிராமமட்ட தலைவர்கள், என சுமார் 30 அங்கத்தவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச முன்னலையில் இணைந்து கொண்டனர்.

எதிர்கால ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இருக்கும் சஜித் பிரமதாசாவை வெற்றி பெறச் செய்யும் முயற்சியில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுவதாக அவர்கள் உறுதியாக கூறியுள்ளனர்.

அது மாத்திரம் இன்றி அம்பாறை மாவட்டத்தில் ஏனைய கட்சிகளில் அங்கத்துவம் வகிப்பவர்களையும் சஜித் பிரேமதாஸவுடைய வெற்றிக்காக களப்பணியில் ஈடுபட முயற்சிப்பதாகவும் உறுதியளித்துள்ளனர். உண்மையில் இந்த செயற்பாடுகளால் எதிர்கால ஜனாதிபதியாக சஜித் பிரேமதாச வருவது மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அமைப்பாளர் வினோகாந்த் இதன் போது தெரிவித்தார் எனவே ஏனையவர்களும் சஜித் பிரேமதாஸ கடந்த காலங்களில் ஜனாதிபதி பதவியோ பிரதமர் பதவியையோ ஏற்றுக் கொள்ளவில்லை என குறை கூறியவர்கள் அனைவருக்குமான ஒரு செய்தியாக தற்பொழுது இடம்பெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் உங்கள் வாக்குகளை சஜித் பிரமதாஸவுக்கு வழங்கி அவர்களை ஜனாதிபதி ஆகும் படியாகவும் மேலும் எமது நாட்டில் காணப்படக்கூடிய அடிப்படைத் தேவைகள் பொருள் விலை உயர்வுகள் ஏழைகளின் அன்றாட வாழ்க்கைச் செலவுகள் போன்ற காரியங்களில் இருந்து நாங்கள் அடுத்த கட்ட நகர்வை நோக்கி செல்ல வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக சஜித் பிரேமதாச ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதி ஆக வரும் பட்சத்தில் நாட்டு மக்களுக்கான சுபிட்சமான வாழ்வு நிச்சயம் மலரும் என்பதனையும் வலியுறுத்தியுள்ளார்.

(05)

# புதிய கலாசார மண்டபம் மாணவர்களுக்காக திறப்பு





(எம்.எப்.றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்வி வவயத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை தைக்கா நகர் ஸஹ்ரா வித்தியாலயத்தில் மாணவர்களின் நண்மை கருதி நிர்மாணிக்கப்பட்ட புதிய கலாசார மண்டபம் பாடசாலை அதிபர் எம் எஸ்.எம்.பைறூஸ் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

முஸ்லிம் ரிலீப் நிறுவனத்தின் அனுசரணையில் பிரதேச கலாசார உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜஃபரின் ஒருங்கிணைப்பின் கீழ் கட்டப்பட்ட இவ் மண்டபத் திறப்பு விழாவுக்கு அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்றகுமதுல்லா பிரதம அதிதியாகவும், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பான், முஸ்லிம் ரிலீப் நிறுவனத்தின் பணிப்பாளர் ஏ.எம்.மிஹ்லார், சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பாடசாலை அதிபரால் கலந்துகொண்ட அதிதிகளுக்கு நினைவுச்சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## திரட்சியின் முக்கியத்துவம்

வரவுள்ள அரசுத் தலைவர் தேர்தலில் தமிழர் தரப்பின் நிலைப்பாடு நிச்சயமாகப் பிளவுண்டு போயுள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. தமிழ் பொது வேட்பாளரா அல்லது சிங்கள வேட்பாளர்களில் ஒருவரை ஆதரிப்பதா என்பதில் தமிழர்களிடையே மிகத் தெளிவான பிளவு காணப்படுகின்றது.

தமிழ் பொது வேட்பாளரை இந்த அரசுத் தலைவர் தேர்தலில் ஒரு தெரிவாக முன்வைத்த குடிமக்கள் அமைப்புக்கள் சிலவற்றின் நகர்வுகளின் முதிர்ச்சியின்மை அல்லது பொதுவெளியில் இந்த விவகாரத்தைக் கொண்டு வருவதன் மூலம் அரசியல் கட்சிகளுக்கு அழுத்தம் கொடுத்து அவற்றை வழிக்குக் கொண்டுவரமுடியும் என்கிற அவர்களின் பழைய இராஜதந்திரம் தோற்றதன் விளைவாக தமிழ் இனம் ஒன்றுபட்டு நிற்கவேண்டிய தருணத்தில் பெரும் பிளவுண்ட நிலை ஏற்பட்டுள்ளது.

வரவுள்ள அரசுத் தலைவர் தேர்தலில் யாரும் தெளிவாக வெற்றிபெறுவதற்கான அறிகுறிகள் எவையும் இதுவரையில் இல்லை. வெற்றிக்கு நெருக்கமாக யாராவது வருவதற்கான வாய்ப்புக்களைக்கூடக் காணமுடியவில்லை என்பதுதான் யதார்த்தமாக இருக்கின்றது. அரசுத் தலைவர் தேர்தலில் ரணில் – சஜித் – அனுர குமார என்று முத்தரப்பு போட்டி நிச்சயம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் வெற்றியை நெருங்கும் சாத்தியப்பாட்டை யாரும் கொண்டிருக்கவில்லை என்பது, தேர்தலுக்கு இன்னும் சில மாதங்கள் இருக்கையில் அவசரப்பட்ட எதிர்பார்ப்பாக இருந்தாலும் இந்தத் தேர்தலில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் மிகக் காத்திரமான தீர்மான சக்தியாக இருக்கப் போகின்றது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பே வேட்பாளர்கள் யாழ்ப்பாணத்திற்குவருகைதந்துதமிழ்அரசியல்கட்சிகளோடு நடத்துகின்ற பேச்சுக்களே தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளின் முக்கியத்துவத்தை உணர்த்துக்கின்றன. தீர்வை நோக்கி தமிழ் அரசியல் தலைவர்கள் கொழும்புக்கு ஓடிய காலம் மறைந்து தெற்கின் அரசியல் தலைவர்கள் யாழ்ப்பாணம் நோக்கி ஓடிவரும் நிலைமை ஏற்பட்டிருப்பது கண்கூடு. ஒரு காலத்தில் கொழுபுத் தலைமைகள் கிளிநொச்சியை நோக்கி ஓடவேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததை இது நினைவுபடுத்துகின்றது.

அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் களத்தை தமிழர்கள் தமக்கிடையிலான பிளவுகள் மூலம் சிதைப்பது சரியா, முறையா என்பது நன்கு சிந்திக்கப்படவேண்டியது. தீர ஆராயப்படவேண்டியது. அரசுத் தலைவர் தேர்தலுக்கு முன்பாகத் தமிழர்கள் மத்தியில் காணப்படக்கூடிய இந்த பிளவு நிலை தமிழர்களை அரசியல் களத்தில் மேலும் பலவீனப்படுத்தி, அரசுத் தலைவர் தேர்தலுக்குப் பின்னர் தமிழர்களைச் செல்லாக்காசாக்கிவிடக்கூ-டிய அபாய நிலை குறித்தும் விழிப்போடு இருக்கவேண்டும்.

தற்போதைய நிலையில் தமிழர்களின் திரட்சிதான் முக்கியமானது. அரசுத் தலைவர் தேர்தலில் எந்த முடிவைத் தமிழர் தரப்பு எடுத்தாலும் அது ஒரு திரட்சியாக இருக்கவேண்டியது அவசியம். அதுமட்டுமல்ல அந்தத் திரட்சியின் மூலம் தமிழர்கள் பயனடையவேண்டியதும் முக்கியம். அந்தத் திரட்சிக்குக் குந்தகமாக இருக்கக்கூடிய தற்போதைய அரசியல் சூழல் களையப்படவேண்டும். கலந்துரையாடல்கள் மூலமே அது சாத்தியப்படக்கூடும். ஆனால்முடிவெடுத்துவிட்டோம்இனிக்கலந்துரையாடல்களில் ஈடுபடமாட்டோம் என்கிற நிலையைத்தான் காணமுடிகிறது என்பது துன்பியல்.

தமிழர்கள் நன்கு சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய நேரத்தில் அவர்கள் பிளவுபட்டு நிற்பது அருவருக்கத்தக்கது. ஈழத் தமிழர் அரசியல் நலன் கருதி தமிழர்களின் திரட்சியை சாத்தியப்படுத்தக்கூடிய சக்திகள் மேற்கிளம்ப வேண்டிய தருணம் இது.

# ஐக்கிய மக்கள் சக்தி கல்முனையில் இறுக்கமான போக்கை கையாளும்-

## அமைப்பாளர் றஸ்ஸாக் தெரிவிப்பு

ஐக்கிய மக்கள் சக்தி, கடந்த காலங்களில் தனது அரசியல் நீரோட்டத்தில் ஏனைய கட்சி-களுடன் இணைந்து செயற்பட்டதனால் பல்வேறு பாடங்களை கற்றுள்ளது. எனவே எதிர்காலத்தில் அதே தவறுகளை விடாது இறுக்கமான போ-க்கைக் கையாளும் என ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ். றஸ்ஸாக் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தி கல்முனை தொகுதி நிர்வாகிகளுக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனை தொகுதி அலுவலகத்தில் ஜூன் 9 இடம்பெற்றது இந்நி-கழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றும்போதே அமைப்பாளர் றஸ்ஸாக் இதனைத் தெரிவித்தார்.

நிகழ்வில் கௌரவ அதிதியாக ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் எம். எச்.எம். அல் இஹ்ஷான் கலந்து கொண்டிருந்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய சட்டத்தரணி எம்.எஸ். றஸ்ஸாக் தெரிவித்ததாவது:

தற்போதைய சூழலில் கூறப்படும் கருத்துக் கணிப்பிற்கு அமைவாக ஐக்கிய மக்கள் சக்தி 54மூ வீதத்துக்கு மேலான ஆதரவைப் பெற்று முன்ன-ிலை வகிக்கின்றது. இதனால் எமது கட்சியைப் பலவீனப்படுத்த பல்வேறு சக்திகள் முனைகி-ன்றன. இருந்தபோதும் நாட்டு மக்கள் தெளிவான நிலையில் இருக்கின்றனர். கட்சியின் முக்கிய பதவிகளில் இருப்பவர்களான நாங்கள் மிகுந்த அவதானத்துடன் எமது பணிகளை முன்னெடுக்க வேண்டும். கட்சி மீதும் அதன் நடவடிக்கைகள் மீதும் சேறுபூச முனைபவர்களுக்கு தகுந்த விள-க்கங்களை கொடுக்கவேண்டும்.

சில உள்ளூர் அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டதன் காரணமாக கட்சி அடைந்த பின்னடைவுகளை தலைமையிடமும் சம்மந்தப்பட்டவர்களிடமும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளோம். அவைகளை அவர்கள் எற்றுக்கொ-காண்டுள்ளார்கள். கடந்தகாலங்களில் விடப்பட்ட தவறுகளை எதிர்காலத்தில் கட்சி விடாது என தலைமை எங்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளது. பிரதேச அபிவிருத்தி மற்றும் கட்சியின் கௌரவம் போன்றவற்றை உரிமையுடன் அனுபவிக்க வேண்டுமானால் ஐக்கிய மக்கள் சக்தி போன்ற தேசிய கட்சிகளுடன் இணைந்திருப்பதன் ஊட-ாகவே பெற முடியும் - என்றார்.

இங்கு கருத்துத் தெரிவித்த கட்சியின் கல்முனைத் தொகுதி இணைப்பாளர் ஆமீதுலெப்பை அப்துல் கபூர், கட்சியின் தலைமைக்கு துரோகம் செய்-தவர்களுடன் மீண்டும் ஓர் இணைப்பை ஏற்படுத்த சிலர் முயற்சிக்கின்றனர் எனவும் சுட்ட மண்ணும் பச்சமண்ணும் ஒட்டாது என்ற முதியோர் வாக்குக்கு அமைய அவர்களது எண்ணம் நிறைவேறாது என்றும் தெரிவித்தார்.

அமைச்சர்கள் ஆண்ட கல்முனை தொகுதி தற்போது சோபையிழந்து காணப்படுவதாகவும் கல்முனைக்கு உரிய அமைச்சுப் பதவியை ஹக்கீ-மும் றிஷாத்தும் பறித்துச் செல்கின்றனர் எனவும் இவ்வாறானதொரு நிலைக்கு எதிராக நாங்கள் கிளர்ந்தெழ வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வின்போது பின்வருவோருக்கு குறித்த துறைகளுக்கு நியமனக்கடிதங்கள் வழங்கப்பட்டன.

01. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி முகாமையாளராக முகைதீன்பாவா அப்துல் றஹீம்.

02. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி செயலாளர் கே.எம். ஆதம்பாவா (மன்சூர்).

03. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி பிரச்சார செயலாளர் முகம்மட் இப்ராகிம் முகம்மட் றஜாப்டீன்.

04. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி ஊடக செயலாளர் ஜெளபர் முகம்மட் பாஹிம்.

05. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி சட்ட செயலாளர் சட்டத்தரணி நூறுல் அமீன் முகம்மட் அஷாம்.

06. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி இளைஞர் செயலாளர் சுபைதீன் முகம்மட் சிறோஜன்.

07. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி இந்து செயலாளர் பூபாலப்பிள்ளை தாமோதரம்.

08. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி கத்தோலிக்க செயல்லாளர் ராஜகுமார் பிரகாஷ்.

09. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி இஸ்லாமிய செயலாளர் சுலைமாலெப்பை ரவாப்.

10. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி தொழிற்சங்க செயலாளர் மீராலெப்பை முகம்மட் ஜமால்டீன்.

11. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளரின் செயலாளர் மீரா லெப்பை இப்னு மஸஊத்.

12. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி வர்த்தக சங்கங்களின் செயலாளர் ஆதம்பாவா அப்துல் சலீம்.

13. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி ஓட்டோ சங்கங்களின் செயாலாளர் முகம்மட் பாறூக் முகம்மட் இம்தாஸ்.

14. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி இணைப்பாளர் ஆமீதுலெப்பை அப்துல் கபூர்.

15. கல்முனை தொகுதியின் ஐக்கிய மக்கள் சக்தி மீனவர் சங்கங்களின் செயலாளர் சின்ன-லெப்பை நாகூரார்.

# சீன கடலட்டை பண்ணைகள் வடக்கில் எங்கே உள்ளன?

## ஆதாரத்துடன் காண்பிப்பாரா சிறீதரன் ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் சவால்

வடபகுதியில் சீன நாட்டின் கடலட்டைப் பண்ணைகள் எங்கு இருக்கின்றன என்பதை நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் காண்ப-ிக்க முடியுமா எனச் சவால் விடுத்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் சிறீரங்கேஸ்வரன் கடந்த காலங்களில் உயிர்க்கொலை வியாபாரத்தை முன்னெடுத்த அவருக்கு இவ்வாறான பொய்கள்தான் தற்போது தேவையாக இருக்கின்றது என்றும் குற்றஞ்சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் செவ்வாய்க்கிழமை செய்-தியாளர்களிடம் அவர் இது தொடர்பில் தெரிவ-ித்ததாவது:

சுவிர்சலாந்தின் டாவோஸ் நகரில் நடைபெ-ற்ற தமிழர் பொருளாதார மாநாடொன்றில் சீன நாட்டின் உதவியுடன் மேற்கொள்ளப்படுகின்ற கடலட்டைப் பண்ணைகள் புதிய தாக்கங்களை உருவாக்கியுள்ளன, இது கடற்றொழிலில் மிக-ப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றது, குறிப்பாக வடக்கு மீனவர்கள் பெரும் இடர்களை எதிர்நே-ாக்கியுள்ளனர் எனக் கூறியுள்ளார்.

வடக்கிலும் மத்தியிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆட்சி அதிகாரம் இருந்த காலப் பகுதியிலேயே யாழ்ப்பாணம் அரியாலைப் பகுத-ியில் சீன நாட்டின் நிறுவனத்திற்கு கடலட்டை குஞ்சுகள் உற்பத்தி செய்வதற்கான கடலட்டைப் பண்ணையை இவர்கள் வழங்கியிருந்தார்கள்.

கடற்றொழில் அமைச்சராக எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பொ-றுப்பேற்றதன் பின்னர் குறித்த சீன கடலட்டைப் பண்ணை மூடப்பட்டது. அவ்வாறிருக்கின்றபே-ாது சிவஞானம் சிறீதரன் எவ்வித அடிப்படை ஆதாரமும் அற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி புலம்பெயர் தேசங்களில் பொய்யுரைத்து வருகி-ன்றார்.

வடக்கு கிழக்கில் குறிப்பாக வன்னிப் பிரதே-தசத்திலும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பொருளாதார மேம்பாட்டுக்காக அவர் வகுக்கின்ற திட்டங்கள் மக்களிடத்தில் செல்வாக்கு பெற்றுவருவதை பொறுத்துக்கொள்ள முடியாத சிறீதரன் பொன்றோர் தமது அரசியல் இருப்பு கேள்விக்குறியாக இருக்கின்ற சூழலில் இவ்வாறான அவதூறுகளையும் பொய்ப் பரப்-புரைகளையும் நம்பியே தமது அரசியலை ஓட்டவேண்டியிருக்கின்றது.

சிறீதரன் வடக்கில் எங்கே எந்த இடத்தில் சீன நிறுவனத்திற்கு கடலட்டைப் பண்ணைகள் உள்ளது என்பதை ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம். இதைவிடுத்து கடற்றொழில் மக்களின் பொருளாதார பாதிப்புக் குறித்து கவலைப்படாது கவர்ச்சியான அபாண்ட பொய்களை உரைத்து எப்படியாவது மீண்டும் நாட-ாளுமன்றம் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தை அவர் கைவிடவேண்டும் - என்றார்.

# சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். பாடசாலைக்கு 3 மாடிக்கட்டடத்துக்கு அடிக்கல் நடும் விழா





(நவாஸ்)

ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாக்கி போன்ற நகராங்களின் மீது வீசப்பட்ட அணுகுண்டு தாக்கங்களின் பின்னர் ஜப்பான் எவ்வாறு அபிவிருத்தியில் முன்னிலைக்கு வந்ததோ அவ்வாறே இலங்கையில் ஏற்பட்ட அரகலய போராட்டத்தின் பின்னர் அமைச்சுக்களும் நிறுவனங்களும் அபிவிருத்திகள் தொடர்பில் கரிசணை கொண்டுள்ளன என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் கல்முனை மற்றும் காரைதீவு உள்ளிட்ட பிரதேசங்களின் அபிவிருத்திக் குழுக்களின் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தெரிவித்தார். சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ் பாடசாலையில் மூன்று மாடிக்கட்டடம் ஒன்றை அமைப்பதற்காக ஆரம்பகட்டமாக இரண்டு மில்லியன் ஷரூபாக்களை ஒதுக்கீடு செய்து குறித்த கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்காக கடந்த திங்கட்கிழமை பிரதம அதிதியாக கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டிவிட்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜீ.எம்.எம்.எஸ் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம் இல்லியாஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப், தான் பதவியேற்ற காலத்தில் கொரோனா என்றும் பொருளாதார நெருக்கடி என்றும் பல்வேறு தடைகள் வந்து அபிவிருத்தி விடயங்களில் கவனம் செலுத்த முடியாது போனதாகவும் தற்போது அவ்வாறான நிலை மாறி அபிவிருத்தி விடயங்களில் கவனம் செலுத்தக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் அவைகளை முன்னெடுக்க முடியுமானவரை முயச்சிப்பதாகவும் தெரிவித்தார்.

நிகழ்வில் கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீமும் விஷேட அதிதியாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம்.ஜாபீர் அவர்களும் கலந்து கொண்டதுடன் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ஐ. சம்சுதீன், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளரும் பாடசாலையின் பழைய மாணவருமான ஏ.எம். அஷாம் மௌலவி உள்ளிட்ட வர்களுடன் பாடசாலை அபிவிருத்தி-நிறைவேற்றுக் குழுவின் செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம்.றியாஸ், பிரதி அதிபர்களான திருமதி குறைசியா றாபிக், றின்ஷா பர்வின், உதவி அதிபர் எம்.ஏ.சி.எல். நஜீம், பாடசாலையின் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப் பலரும் பங்கு கொண்டனர்.

இங்கு பொன்னாடை போர்த்தப்பட்டு நினைவுசின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

# மிகநீண்ட நாள்களாக தேடப்பட்டு வந்த சந்தேகநபர் சம்மாந்துறையில் கைது

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பொலிஸாரால் மிக நீண்ட நாட்களாக பல்வேறு திருட்டு சம்பவம் மற்றும் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான அன்வர் என்பவர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் திங்கட்கிழமை திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட போது பொது மக்களால் மடக்கிப்பிடிக்கப்பட்டு சம்மாந்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

மேற்படி சந்தேக நபர் திருகோணமலை, புல்மோட்டை, ஓட்டமாவடி, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, அக்கறைபற்று, திருக்கோவில், பொத்துவில் போன்ற பொலிஸ் பிரிவில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக விசாரணையை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினரின் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# உயர்தரப் பரீட்சையில் கல்லொழுவை அல் அமானில் 11 மாணவிகள் தேர்வு

(ஐ.ஏ.காதிர்கான்)



வெளியாகியுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின்படி, மினுவாங்கொடை கல்லொழுவை அல் அமான் முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து இம்முறை பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 11 மாணவிகள் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இதில், அதி சிறப்புச் சித்திகளைப்பெற்றுள்ள மாணவிகளான எம்.ஜே.எப். அஸ்மா (3ஏ), ஜே.எஸ்.எப். ஷரபா (3ஏ) மற்றும் மாணவிகளான எம்.எம்.எப். இல்மா (2ஏ பீ), எம்.எப். ஆதிகா (ஏபீசீ), எம்.ஆர்.எப். நபீலா (2ஏ சீ), எம்.ஆர்.எப். நபீஹா (ஏ 2பீ), எம்.என்.எப். ஆயிஷா (2ஏ சீ), எம்.என்.எப். திக்ரா (ஏ 2பீ) ஆகியோர் கலைப் பிரிவிலும், மாணவிகளான எம்.ஆர்.எப். ருகையா (ஏ 2பீ), எம்.ஆர்.எப். அப்ரா (ஏ 2சீ), எம்.என்.எப். பௌஸா (ஏ 2சீ) ஆகியோர் வர்த்தகப் பிரிவிலும் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்று, பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்விக் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர் என்று, வித்தியாலய அதிபர் எம்.ரீ.எம். ஆஸிம் தெரிவித்துள்ளார். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# குச்சவெளி வைத்தியசாலைக்கு மருந்துப் பொருள்கள் அன்பளிப்பு



(எச்.சம். ஹலால்தீன்)

திருகோணமலை குச்சவெளி பிரதேச வைத்திய சாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக முபாரக் பவுண்டேசன் 50 ஆயிரம் ஷரூபா பெறுமதியான மருந்துப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியது. மருந்து பொருள்களை கையளிக்கும் நிகழ்வு குச்சவெளி வைத்திய சாலை வளாகத்தில் இடம்பெற்றது.

குச்சவெளி பிரதேச வைத்திய சாலையின் அதிகாரி வைத்தியர் பண்டாரவிடம் இம்மருந்து பொருள்கள் கையளிக்கப்பட்டன.

இதற்கான மருந்து பொருள்களை வழங்கிய முபாரக் பவுண்டேஷன் அமைப்பின் உரிமையாளர் முபாரக்கிற்கும் மக்கள் சார்பாகவும் வைத்தியசாலை சார்பாகவும் வைத்திய அதிகாரி மாயபண்டார நன்றியைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் குச்சவெளி பிரதேச வைத்திய அதிகாரி, குச்சவெளி கே.வி.சி அமைப்பின் உத்தியோகத்தர்கள், முபாரக் பவுண்டேஷன் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.(05)

# 10,000 கவிதைகள் தொகுப்பில் ஜலீலா முஸம்மிலுக்கும் இடம்

## 'துயில்நதிப் பூக்கள்' புதுக்கவிதைநூலும் தெரிவு

(ஐ.ஏ.காதிர்கான்)

தமிழ் நாடு - தமிழ்த்தொண்டன் 'பைந்தமிழ்ச் சங்கம்' மற்றும் 'நிலா வட்டம் இலக்கிய அமைப்பு' இணைந்து 'கவித்தேனருவி' எனும் பத்தாயிரம் கவிதைகளின் தொகுப்பு கொண்ட 'உலக சாதனை நூல்' வெளியீட்டு விழா, அண்மையில் சென்னை, எருக்கஞ்சேரி, 'வாம் மஹால்' விழா மண்டபத்தில் இனிதே நடைபெற்று முடிந்தது.

கவிஞர் என். ஜாகிர் உஷேன் தொகுப்பாசிரியராக இருந்து உருவாக்கம் பெற்ற 'கவித்தேனருவி' எனும் 10 ஆயிரம் கவிதைகளைக் கொண்ட மிகப் பிரமாண்டமான இக்கவிதை நூல், சர்வதேச அளவிலான 100 கவிஞர்களின் தலா 100 கவிதைகள் அடங்கலாக வெளியீடு செய்து வைக்கப்பட்டதுடன், 'இந்திய நோபல் உலக சாதனை'யிலும் இச்சிறப்பு நூல் இடம்பிடித்துள்ளமை விசேட அம்சமாகும்.

அத்துடன், இம்மாபெரும் உலக சாதனைத் தொகுப்பான 'கவித்தேனருவி'யில் கவிஞர் டாக்டர் ஜலீலா முஸம்மிலின் நூறு கவிதைகள் தேர்வு செய்யப்பட்டு, 'துயில் நதிப் பூக்கள்'

எனும் தலைப்பில் உள்வாங்கப்பட்டுள்ளமையும் சிறப்பம்சமாகும்.

உலகளாவிய நாடுகளில் இருந்தும் பல கவிஞர்கள் இச்சிறப்பு நூலில் இணைந்து சிறப்பித்துள்ளமை வரவேற்புக்குரியது.

'நோபல் உலக சாதனை' அங்கீகாரம் பெற்ற 'கவித்தேனருவி' நூல் வெளியீட்டு விழா நிகழ்வில், அனைத்து கவிஞர்களுக்கும் பொன்னாடை போர்த்தப்பட்டு 'நோபல் சாதனையாளர்' சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

எழுத்தாளர் கவிஞர் டாக்டர் ஜலீலா முஸம்மில் எழுதிய 'துயில் நதிப் பூக்கள்' புதுக்கவிதை நூல், மிக விரைவில் இலங்கையிலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# ஆலையடிவேம்பு பிரதேச செயலர் திரவியராஜ்ஜுக்குக் கௌரவம்

(வி.ரி.சகாதேவராஜா)

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளராக இலங்கை நிர்வாக சேவை முதலாந்தர அதிகாரி இராசரத்தினம் திரவியராஜ் நியமிக்கப்பட்டதையடுத்து பல அமைப்புகளும் ஆர்வலர்களும் வாழ்த்து தெரிவித்து கௌரவித்து வருகின்றனர்.

அந்த வகையில் காரைதீவிலிருந்து திங்கட்கிழமை ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குச் சென்ற காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா , சமூக செயற்பாட்டாளர் வினாயகம் விமலநாதன் ஆகியோர் புதிதாக பதவியேற்ற திரவியராஜ/க்கு பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து கௌரவித்தனர்.

திரவியராஜ் முன்னதாக வெல்லாவெளி நிந்தவூர் அம்பாறை போன்ற பிரதேசங்களில் கடமையாற்றி பொத்துவில் பிரதேச செயலாளராக சிலகாலம் அருஞ்சேவையாற்றி இருந்தார் .

அதன் பின்னர் ஆட் பதிவு திணைக்கள பிரதி ஆணையாளராக கிழக்கில் பணியாற்றி வந்த வேளையில், தற்போது ஆலையடிவேம்பு பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறந்த முற்போக்கு சிந்தனையுடன் சிறந்த சமூகசேவையுமாற்றி வந்த மண்ணின் மைந்தனான அவரை ஆலையடிவேம்பு சமூகம் மற்றும் அம்பாறை மாவட்ட சமூக செயற்பாட்டாளர்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர். (05)



## கடலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் கடற்தொழிலுக்கு சென்ற இவர்கள் இருவரையும் காணவில்லை என குடும்பத்தினர் முறையிட்டிருந்தனர்.

சீரற்ற காலநிலை காரணமாக நடுக்கடலில்தத்தளித்த இவர்களைப் பத்திரமாக மீட்ட இந்திய மீனவர்களுக்கு நன்றியைத் தெரிவித்தார் இலங்கை மீனவ மக்கள் தொழிற் சங்கத்தின் வட மாகாண இணைப்பாளர் அ.அன்னராசா.

நல்லெண்ன அடிப்படையில் மனித நேயத்துடன் இந்த இரு மீனவர்களையும் விடுவிக்க இந்தியப் பிரதமர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

இந்த இரு மீனவர்களையும் தமிழ்நாட்டின் நாகபட்டினம் மாவட்டத்தின் ஆற்காட்டுதுறை மீனவர்கள் பத்திரமாக மீட்டுக் கரை சேர்த்தனர்என்றுதெரிவிக்கப்பட்டது.

''நடுக் கடலில் தத்தளித்த ஊர்காவற்துறை, அனலை தீவைச் சேர்ந்த இரண்டு மீனவர்களையும் மீட்டுக் கரைக்கு கொண்டு சென்று காப்பாற்றிய தமிழ்நாட்டின் நாகபட்டினம் மாவட்ட ஆட்காட்டுதுறை மீனவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்து பாராட்டிக் கொள்கிறோம். இந்திய மீனவர்களுடைய மனிதநேயப் பணிக்கு மீனவர்கள் அமைப்புக்கள் சார்பாக வாழ்த்துக்களையும் நன்றிகளையும்கூறிகொள்கிறோம்" என்றார் அன்னராசா.

''இவர்கள் உண்மையான கடற்தொழிலாளர்கள். அன்றாடம் உழைத்து வாழும் கடற்தொழிலாளர்கள். அவர்களின் குடும்பங்கள் மிகப் பெரிய கஷ்டத்தோடுஇருக்கிறார்கள். ஆகவே அவர்களின் படகு இயந்திரத்தோடு அவர்களை இங்கு அனுப்பி வைக்க வேண்டும் எனக் கோருகிறோம்.

இந்தஇரண்டுமீனவர்களையும் நல்லெண்ணத்துடனும் மனித நோயத்தோடும் பாரதப் பிரதமர், தமிழக முதல்வர், இந்திய தூதரகம் விடுதலைசெய்யநடவடிக்கைஎடுக்க வேண்டும் எனக் கோருகிறோம்.

இந்த இரு மீனவர்களுடன் அங்குகரையொதுங்கியஅவர்களின் படகையும் வெளி இணைப்பு இயந்திரத்தோடு யாழ்ப்பாணம் அனலைதீவு பகுதிக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்றும் அவர்களின் குடும்பம் சார்பாகவும் வடக்கு கடற்தொழிலாளர்கள் சார்பாகவும் பணிவான வேண்டுகோளை முன்வைக்கிறோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## அமைச்சரவையின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக்கூட்டத்தில்அனுமதி வழங்கப்பட்டது.

விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட ஒழுங்குமுறைகளை நாடாளுமன்றத்தின்ஒப்புதலுக்காகசமர்ப்பிப்பதற்கு நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும்தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின்07 ஆம்இலக்கஇறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குமுறைகள் மற்றும் மேற்படி சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட தரப்படுத்தல் மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகள் நாடாளுமன்ற ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது.



காலைக்கதிர் Kalaikkathir

## ஊடகவியலாளரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிள்களில் வந்த ஐவர் அடங்கிய வன்முறை கும்பல் கூரிய ஆயுதங்களுடன் அத்துமீறி வீட்டுக்குள் நுழைந்து, தாக்குதல் நடத்தியுள்ளது. .

வீட்டின்ஜன்னல்கண்ணாடிகள் , மீன் தொட்டியை அடித்து நெருக்கப் பட்டுள்ளன. வீட்டின் வரவேற் பறையில்வைக்கப்பட்டிருந்தபொருட் களைத் தீ வைத்து எரித்துள்ளனர்.

ஊடகவியலாளரின், மோட்டார் சைக்கிள் மற்றும் , அவரது சகோதரனின் முச்சக்கரவண்டி ஆகியவற்றையும் தீயிட்டு எரித்துள் ளதுடன் மீதும் கூரிய ஆயுதங்களால் தாக்கிச் சேதப்படுத்துயுள்ளனர்.

'திருநங்கைளின்உணர்வுகளை தவறாகசித்திரிக்காதே'எனஅச்சடிக்கப் பட்ட துண்டுப்பிரசுரங்கள் வீட்டினுள் வீசி விட்டு குறித்த கும்பல் தப்பி சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று துறைசார் மேற்பார்வை குழு அங்கத்தவர்களாகவே இங்கு வந்துள்ளீர்கள். அவ்வாறு செய்வதற்கான ஆலோசனையை முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவே வழங்கியிருந்தார். இதனால் இளைஞர், யுவதிகள் நாட்டின் முன்னேற்றுத்துக்கான தங்களது யோசனைகளை வழங்க முடியும். அந்த யோசனைகளை நாமும் செவிமடுப்போம்.

நாட்டின் பொருளாதார ரீதியான வங்குரோத்து நிலையை பற்றி பலரும் பேசுகிறார்கள். அதனை நான் ஏற்றுகொள்ளப்போவதில்லை. இந்த நாடு பொருளாதார ரீதியாக மாத்திரமன்றி அரசியல் ரீதியாகவும் வங்குரோத்தடைந்துள்ளது என்பதே உண்மையாகும். இவை இரண்டும் பிரித்துப் பார்க்க முடியாத பிரச்சினைகளாகும்.

நாட்டில் சரியான பொருளாதார முறைமை இன்மையே அதற்குக் காரணமாகும். நாட்டில் இதுவரையிலும் இறக்குமதியை மையப்படுத்திய பொருளாதாரமே காணப்பட்டது. தேவையான அனைத்துக் பொருட்களையும் இறக்குமதி செய்தோம். அதற்கு செலுத்தத் தேவையான பணமும் எம்மிடம் இருக்கவில்லை. அதற்கு மத்தியில் போருக்குச் செலவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

போருக்குப் பின்னர் துரிதமான பொருளாதார வளர்ச்சியை எட்டிப் பிடிப்பதற்கான வாய்ப்பு நாட்டுக்கு கிடைத்திருந்தது. போர் நிறைவடைந்து 15 வருடங்கள் ஆன பின்பும் நாம் அந்த முன்னேற்றத்தை அடைய முடியவில்லை. நாம் பழைய முறைகளையே பின்பற்றினோம். பணம் இல்லாத வேளையில் கடன் பெற்றுக்கொண்டோம். அதனை மீளச் செலுத்த முடியாமல் போனது.

இவ்வாறான நேரத்தில் நாட்டு மக்களுக்கு உண்மை நிலையைச் சொல்ல எவரும் முன்வரவில்லை. இருப்பினும் நாட்டில் பொருளாதார மாற்றம் ஒன்று அவசியம் என்பதை நான் வலியுறுத்தினேன். அதற்கான பணிகளை செய்யும்போது நாட்டை விற்கப் போவதாக பிரசாரம் செய்யப்பட்டது. இறுதியில் நாம் வங்கு ரோத்து நிலையை அடைந்தோம்.

நாட்டின் வருமானதேவையைக் கருத்தில் கொண்டு 2015 ஆம் ஆண்டு நான் பிரதமராக பதவி வகித்த காலத்தில் வரி அதிகரிப்புச் செய்ய வேண்டியிருந்தது. 2019 ஆம் ஆண்டில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச வரிகளை குறைத்தார். அதனால் நாட்டின் வருமானம் குறைந்தது.

அந்த நேரத்தில் கொவிட் தொற்றும் பரவியது. நாட்டுக்கு 03 பில்லியன் டொலர் வெளிநாட்டு கையிருப்பு தேவைப்பட்டது. இருப்பினும் நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் ஒருவரும் அது பற்றி பேசவில்லை. ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கை பிரகடனத்தில் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தோம். வேறு எவரும் அதுபற்றி பேசவில்லை. அதற்கு மாறாக செய்ய முடியாது என்று அறிந்தும் பல பொய்யான வாக்குறுதிகளை வழங்கினர். அதன் பயனாக ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒரேயொரு நாடாளுமன்ற ஆசனம் மட்டுமே கிடைத்து.

உலகின் வேறு எந்தவொரு நாட்டிலும் ஒரு ஆசனத்தை வென்று நாடாளுமன்றத்திற்கு தெரிவானவர்கள் பிரதமர் அல்லது ஜனாதிபதியாக பதவியேற்றதில்லை. ஆனால் இலங்கையில் அது நடந்தது. நாட்டின் அரசியல் வங்குரோத்து நிலையே அதற்கு காரணமாகும். நாட்டை பொறுப்பேற்றுக்கொண்டு பிரச்சினைகளைத் தீர்க்க எவரும் முன்வரவில்லை. அதனால் நான் ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொண்டேன்.

அதன்பின்னர் நாட்டின் இளைஞர் யுவதிகளிடமும் இந்த பொறுப்பு க்களை வழங்கி அவர்களுக்கு இதுகுறித்த தெளிவூட்டல்களை வழங்க நாம் தீர்மானித்தோம். அதன்படியே இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது நாட்டின் முன்னேற்றத்துக்கான வேலைத்திட்டம் ஒன்று உள்ளது. அதனைப் பொறுப்பேற்று நாட்டை முன்னேற்றிச் செல்வதற்காக இளைஞர்கள் தயாராக வேண்டும்.

இன்று அரசியல்வாதிகள் பலதரப்பட்ட வாக்குறுதிகளை வழங்குகின்றனர். அவர்களில் எவரும் நாட்டின் முன்னேற்றுத்துக்கான கொள்கைகளை முன்மொழியவில்லை. எதிர்க்கட்சித் தலைவரும் அநுர குமார திசாநாயக்கவும் எந்த இடத்தில் விவாதம் செய்வது என்பது குறித்தே ஒரு மாத காலமாக விவாதித்தனர். இறுதியாக ஒரு விவாதத்திற்கும் வரவில்லை. இவர்களில் ஒருவரிடத்திலும் நாட்டின் முன்னேற்றத்திற்கான கொள்கைகள் இல்லை.

ஆளும் தரப்பு கொண்டுச் செல்லும் வேலைத்திட்டத்திற்கு மாறான வேறு முறைமகள் இருக்குமாயின் அதனை அவர்கள் கூறவேண்டும். எவரும் அவ்வாறான திட்டத்தை முன்வைத்திருப்பதாகத் தெரியவில்லை. உங்கள் எதிர்காலத்தை பொறுப்பேற்க அவர்கள் தயாராக இல்லாத பட்சத்தில் உங்களின் எதிர்கால முன்னேற்றத்தை நீங்களே தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

அதற்கான வேலைத்திட்டம் மிக அவசியமானது. உங்கள் அறிவு மேம்பாட்டிற்காக ஏனைய அதிகாரிகள் மற்றும் தனியார் துறை பிரதிநிதிகளை சந்திக்கவும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். புதிய திட்டங்களை முன்னோக்கி கொண்டுச்செல்ல வேண்டும். பழைய முறைமைகளில் சிக்கிக் கிடப்பதை விடுத்து துரித அபிவிருத்தியை நோக்கிநகர்வதற்கு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்.' என்றார்.

இதன்போது இளைஞர்கள் எழுப்பிய கேள்விகளும் அதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அளித்த பதில்களும் வருமாறு,

கேள்வி- தேசிய இளைஞர் நாடாளுமன்றம் என்ற கருத்தை ஒரு கருத்தாக்கத்திற்கு அப்பாற்பட்டு, அரசமைப்பு அதிகாரங்கள் கொண்ட நிறுவனமாக மாற்றுவதற்கான சட்டமூலம் தற்போது உங்கள் கைகளுக்கு கிடைத்துள்ளது. அது குறித்து உங்கள் கருத்து என்ன?

பதில்-இளைஞர் நாடாளுமன்றம் நீண்டகாலமாக இயங்கிவருகின்றது. அது தொடர்பான சட்டத்தை முன்வைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. இந்தக் குழுவை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பது ஒரு பிரச்சினை. இதை இளைஞர் கழகங்களுக்கு மட்டுப்படுத்துவதா? அல்லது திறந்துவிடுவதா? திறந்து விடுவது என்றால் அந்த பட்டியல்களை எவ்வாறு தயாரிப்பது? போன்ற பல கேள்விகள் எழுந்துள்ளன. அவற்றுக்குத் தீர்வு காணுமாறு தெரிவித்துள்ளேன். அதன்படி நாம் செயல்பட முடியும்.

அடுத்ததாக மாகாண சபைகள், பிரதேச சபைகளில் இளைஞர் மற்றும் பெண்களின் பிரதிநிதித்துவம் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். ஜனாதிபதி ஆர். பிரேமதாசவின் காலத்தில்தான் இளைஞர் பிரதிநிதித்துவம் குறித்து முன்மொழியப்பட்டது. ஆனால் அது வேட்புமனுவிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அடுத்த இரண்டு அல்லது மூன்று வருடங்களில் இவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை நான் கொள்கையாக ஏற்றுக்கொண்டுள்ளேன். இளைஞர் பிரதிநிதித்துவம் பற்றிய கலந்துரையாடலை இப்போதேனும் ஆரம்பிக்க வேண்டும்.

மேலும், மக்கள் சபைகள் இருந்தால் அதற்கு பெண்கள் மற்றும் இளைஞர்களின் பிரதிநிதித்துவம் தேவையாக இருந்தால் அது எந்த வடிவில் என்பதையும் சிந்திக்க வேண்டும். இது குறித்த இளைஞர்களின் கவனத்தை ஈர்த்து விடை காண்பது பொருத்தமானது என நான் நினைக்கிறேன்.

கேள்வி - அமைச்சுகளின் செயலாளர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு இளைஞர் தலைமைத்துவ செயலணியொன்றைகட்டியெழுப்பும் சந்தர்ப்பம் எமக்கு உள்ளதா? ஸ்மார்ட் தொழிநுட்பம் தொடர்பான செயற்பாடுகளில் கீழ் மட்டத்தில் அது பற்றிய புரிதல் இல்லையா?

பதில்- அமைச்சுகள் மற்றும் நிர்வாகத்தில் இளைஞர்களின் யோசனைகளை உள்ளீர்ப்பது மிகவும் பெறுமதிமிக்கது. அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை நீங்களே கலந்துரையாடி எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நாடாளுமன்றத்தில் இணைந்து செயற்படுவதன் முக்கியத்துவம் என்னவென்றால், அது கொள்கைகளை வகுப்பதில் பங்குபெற வாய்ப்பளிக்கிறது. அமைச்சுகள் அல்லது மாகாண சபைகளில் இணைவது என்பது அந்தக் கொள்கைகளை அமுல்படுத்துவதில் இணைவதாகும். அவ்வாறு இணைய மிகவும் பொருத்தமான பொறிமுறை எது என்பதை ஒன்றாக கலந்துரையாடி எமக்கு தெரிவிக்கவும். அதைப் பற்றி நான் கூற மாட்டேன். ஏனென்றால் இது என்னுடைய எதிர்காலம் அல்ல. 2048இல் நான் இருக்க மாட்டேன். அது உங்களின் எதிர்காலம்.

கேள்வி-நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போது, அந்த சவாலை ஏற்று வெற்றிகரமாக அதனை எதிர்கொண்டீர்கள். ஆனால், எவ்வாறேனும் அடுத்த தேர்தலில் நீங்கள் தோல்வி அடைந்தால், தற்போதைய திட்டத்தை தொடர யாராவது தலைமை தாங்குவார்களா?

பதில் - இந்தத் தேர்தலில் தீர்மானிக்கப்படுவது எனது வெற்றி தோல்வி அல்ல. நாடு தோற்கடிக்கப்படுமா? இல்லையா? என்பதே தீர்மானிக்கப்படும். தற்போது சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி பொருளாதார வேலைத்திட்டத்தை முன்வைத்துள்ளோம். அதை நடைமுறைப்படுத்தவே பொருளாதார மாற்றசட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அது சரிந்தால் மீண்டும் அந்நியச் செலாவணியை நாம் இழக்க நேரிடும். மீண்டும் மருந்து, பெட்ரோல், எரிபொருள் இல்லாமல் வரிசையில் நிற்க வேண்டியேற்படும். எனவே, தற்போதைய ஆளும் தரப்பின் வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதா இல்லையா என்பதை புதிய ஆட்சியாளர்கள் தீர்மானிக்க வேண்டும்.

அனைத்து கட்சி தலைவர்களும் இந்த பொருளாதார மாற்ற சட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு இல்லையெனில், ஒரு மாற்றுவழியை முன்வைக்கவும். இத்தேர்தலில் தனி நபரை அன்றி, பொறிமுறையையே தெரிவு செய்ய வேண்டும். இந்த முறை தொடர வேண்டும் என்பதில் நீங்கள் திருப்தி அடைந்தால், இந்த முறையுடன் முன்னோக்கிச் செல்லலாம். அவ்வாறின்றி மீண்டும் வீழ்ச்சியடைந்த பொருளாதாரம், அந்நியச் செலாவணி இல்லாத, மருந்து, உரம் இல்லாத நாடு வேண்டுமானால் இன்னொரு தரப்பினரைத் தேர்ந்தெடுக்கலாம். நீங்கள் ஒரு நாடாக முன்னோக்கி செல்ல விரும்பினால், நீங்கள் ஆளும் தரப்பு வேலைத்திட்டத்துடன் முன்னோக்கிச் செல்லலாம்.

ஆளும் தரப்பின் வேலைத் திட்டம் சரியில்லை என்றால் அதற்கு மாற்று வழியை முன்வைக்க வேண்டும். ஆனால் இதுவரையில் அவ்வாறான மாற்றுத் திட்டத்தை யாரும் முன்வைக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து ஒப்பந்தம் திருத்தப்படும் என்று சிலர் கூறுகின்றனர். ஒப்பந்தத்தை மாற்ற முடியாது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. அடுத்த மாதம் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபடுவதற்கு என்னால் கையெழுத்திடாமல் இருக்க முடியுமா? அதனால், உங்கள் எதிர்காலத்தைப் பற்றி நீங்கள் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்.

## 15 புதிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நமது நாட்டின் நீதித்துறைக் கட்டமைப்பில், நீதியை நிலை நாட்டுதல் தொடர்பான மிகப்பாரிய சட்ட மறுசீரமைப்புகள் இடம்பெற்ற காலமாக இக்காலகட்டத்தைக் குறிப்பிடலாம். கடந்த 18 மாதங்களில் சுமார் 75 சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. இது நாட்டில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்த உதவும் என்பதை குறிப்பிட வேண்டும்.

மேலும், அரச துறையிலும், தனியார் துறையிலும் இலஞ்சம், மோசடி, ஊழல், கொமிஸ் எடுத்தல் போன்றவற்றைத் தடுக்கும் வகையில் ஊழல் தடுப்புச் சட்டம் ஆளும் தரப்பால் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் சபையின் ஊழல் எதிர்ப்பு சாசனத்துடன் பொருந்தும் வகையில் இது தயாரிக்கப்பட்டுள்ளது. அதன்படி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு பல அதிகாரங்களும் சுதந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. விளையாட்டு மற்றும் பாலியல் இலஞ்சம் தொடர்பாக புதிய குற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

பெயரளவில் இருந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான சட்டம் தற்போது நிலையான நிலையை எட்டியுள்ளது. எனவே, நாட்டின் அனைத்து பிரஜைகளும் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான அறிக்கைகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் சொத்து பொறுப்பு அறிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்கிறார்கள். மேலும், வழக்குப் பொருட்கள் மற்றும் போதைப் பொருட்களை அகற்றுவது தொடர்பாக புதிய சட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

குற்றச் செயல்கள் மூலம் பெறப்பட்ட சொத்துக்கள் குறித்து விசாரிக்க அதிகார சபையொன்று அமைக்கப்பட்டுள்ளது. முதன்மை வழக்கு நடவடிக்கை சட்டத்திற் குத்திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. திருமணம் தொடர்பான புதிய சட்டமூலமும் முன்வைக்கப் பட்டுள்ளது. மேலும், முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் தொடர்பாக பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய மாற்றங்களை மாத்திரம் முன்வைத்து அந்த சட்டமூலத்தை திருத்த அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

தற்போது காதி நீதிமன்றம் தொடர்பாக பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. அதன்படி, இரண்டு மாற்றங்களைச் செய்ய முன்மொழியப்பட்டுள்ளது. அதேபோன்று, வெளிநாட்டு நீதிமன்ற தீர்ப்புகளை கையாளும் வெளிநாட்டு நீதிமன்ற தீர்ப்புகளை செயல்படுத்துவதற்கான வரைவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில வாரங்களில் சுமார் 15 மிக முக்கியமான சட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. குற்றவியல் நடைமுறைச் சட்டத்திலும் பல திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், அண்மையில் நிறைவேற்றப்பட்ட நீரியல் சட்டத்தை அடுத்த ஆண்டு அமுல்படுத்தலாம். இதன்மூலம் இந்நாட்டின் கடல் எல்லைகள் வழியாக பயணிக்கும் கப்பல்கள் மூலம் 50 மில்லியன் டொலர்களுக்கு மேல் வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றார்.

## அத்தியாவசிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் மற்றும் பாதுகாப்புப் படைகளின் தலைவர் ஆகியோரின் சேவை நீடிப்பு குறித்து ஊடகவியலாளர் ஒருவர், எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்குபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசமைப்பிற்கு அமைவாக ஒக்டோபர் மாதம் 15க்கு முன்னர் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தேர்தலுக்காக வரவு செலவு திட்டத்தின் ஊடாக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் அவசரமாக புதிய அதிகாரிகளை நியமித்து, இதுவரை மேற்கொண்ட கடமைகளை தொடர்ச்சியாக கொண்டு செல்ல முடியாது. சில அத்தியாவசிய சேவைகளில் சிக்கல்கள் ஏற்படாமல் இருப்பதைத் தடுக்க விசேட நிபந்தனைகளின் கீழ் சேவை நீட்டிப்புகளை வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# சுகாதாரமற்ற தெருவோர வியாபாரம் மூன்று பேருக்கு 35,000 ரூபாய் தண்டம்





திருநெல்வேலி பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழுவினரால் திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் கடந்த (மே) மாதம் 29 ஆம் திகதி இரவு தெருவோர வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது மருத்துவ சான்றிதழ் இன்றி உணவைக் கையாண்டமை, தனிநபர் சுகாதாரம் இன்றி உணவைக் கையாண்டமை போன்ற அடிப்படையான சுகாதார வசதிகள் கூட இல்லாமல் சில வியாபார நிலையங்கள் இயங்கியமை பரிசோதனையில் இனங்காணப்பட்டது.

அவ்வாறு இனங்காணப்பட்ட மூன்று வியாபார உரிமையாளர்களுக்கு எதிராக யாழ்.மேலதிக நீதிவான் நீதிமன்றில் பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் வழக்குகள் கடந்த திங்கட்கிழமை தாக்கல் செய்யப்பட்டது. வழக்குகளை அன்றே விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேலதிக நீதிவான் செ. லெனின்குமார், மூவரிற்கும் மொத்தமாக 35 ஆயிரம் ரூபா தண்டம் அறவிட்டதுடன் கடும் எச்சரிக்கையும் வழங்கினார்.

(05)

# 'பெண் ஆயுள்' எனும் தலைப்பில் பெண்களுக்கான செயலமர்வுகள்

## சாய்ந்தமருதில் நடந்தது



(எம்.எப்.றிபாஸ்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம மட்ட சமுதாய அடிப்படை அமைப்பின் பெண் உறுப்பினர்களுக்கான 'பெண் ஆயுள்' எனும் தலைப்பில் உணவு பழக்க வழக்கமும், தாய்,சேய் பராமரிப்பு மற்றும் குடும்ப நலத்திட்டம் தொடர்பான செயலமர்வு சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் ஏற்பாட்டில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தின் அனுசரணையில் சாய்ந்தமருது பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் திங்கட்கிழமை இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க சமுதாய அடிப்படை அமைப்புக்கள் விடய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப். றிகாஸா ஷர்பீனின் நெறிப்படுத்தலில் சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வின் வளவாளராகவும், விசேட அதிதியாகவும் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அர்ஷத் காரியப்பர் கலந்து கொண்டார்.

'பெண் ஆயுள்' எனும் தலைப்பில் உணவு பழக்க வழக்கமும் தாய்,சேய் பராமரிப்பு, தொற்றா நோய், மற்றும் குடும்ப நலத்திட்டம் பற்றிய பூரண விளக்கத்தை வைத்தியர் அர்ஷத் காரியப்பர் வழங்கினார். சாய்ந்தமருது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் கே.எம். கபீர், செயலாளர் எம்.ஜானுான், பொருளாளர் ஏ.ஆர்.ஷர்மிலா உள்ளிட்ட சமுதாய அடிப்படை அமைப்பின் பெண் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(05)

# நல்லை ஆதீன முதல்வரை சந்தித்தார் அநுரகுமார

## கலாநிதி ஆறு.திருமுருகனும் உடனிருந்தார்





நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகளை தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடவுள்ளவருமான அநுரகுமார திஸநாயக்க திங்கட்கிழமை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றார்.

நல்லை ஆதீன முதல்வருடன் இந்துமாமன்றத்தின் உபதலைவரும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகனும் உடனிருந்தார்.

(05)

# தம்பதெனிய அல் ஹிஜ்ராவிலிருந்து முதன்முறையாக ஐந்து பேர் தேர்வு



(ஐ.ஏ.காதிர்கான்)

வரலாற்றுச் சிறப்புமிக்க தம்பதெனிய நகரில் 1949 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிரி உல்ல தம்பதெனிய அல் ஹிஜ்ரா மகா வித்தியாலயம், அதன் 75 ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைத்துள்ள நிலையில், இவ்வருடம் இந்த வித்தியாலயத்திலிருந்து முதன் முறையாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவ மாணவிகளில் ஐந்து பேர் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இதன்பிரகாரம், மாணவிகளான எஸ். எப். ருஷ்தா (3ஏ), எம்.எப். லீனா ஜெஸமின் (ஏ 2பீ), எஸ்.ஏ.பீ.பீ.பீ. சுமணசேகர (3பீ) ஆகியோர் பல்கலைக்கழகங்களுக்கும், ரீ.எப்.எப். ரமீஸா (ஏ 2சீ), எம்.எஸ்.எப். நிப்லா (2சீ எஸ்) ஆகிய மாணவிகள் கல்விக் கல்லூரிகளுக்கும் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வித்தியாலய ஆசிரியர்கள், வித்தியாலய சமூகத்தினர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரினதும் கூட்டு முயற்சியே வரலாற்றில் முதலில் பெற்ற இவ்வெற்றியாகும் என, அதிபர் சிபானா சனூன் பாராட்டிப் பேசினார்.

(05)

# வடமேல் மாகாண ஆளுநருடன் அலி சப்ரி ரஹீம் எம்.பி. சந்திப்பு



(எம்.சியாஜ் )

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மற்றும் வடமேல் மாகாண ஆளுநர் அகமத் நசீர் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு திங்கட்கிழமை ஆளுநர் மாளிகையில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் புத்தளம் மாவட்ட அபிவிருத்தி தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் சேவை நாடிகளான புத்தளம் மாவட்ட அரச உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆளுநருடன் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும், ஆலோசனைகளையும் பெற்றுக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆயிரக்கணக்கான வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில அமைந்தது ஜனாதிபதியின் இந்திய பயணம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

நாட்டிற்கு வருமானம் ஈட்டும் வகையிலும், நாட்டில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு ஆயிரக்கணக்கில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலும் ஜனாதிபதியின் இந்தியப் பயணம் அமைந்திருந்ததாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தெரிவித்தார். மோடியின் பதவியேற்புக்கான தனது இந்தியப் பயணம் வெற்றிகரமாக அமைந்திருந்ததாக ஜனாதிபதி அமைச்சரவையில் தெரிவித்திருந்தார் என்றும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் செவ்வாய்க் கிழமை செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார், அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஒலுவில் துறைமுகத்தை புனரமைத்து மீள இயக்குவது தொடர்பான கலந்துரையாடல் இன்று இடம்பெற்றது. துறைமுக அதிகார சபையின் அதிகாரிகள், கடற்படையினர், துறைசார் நிபுணர்கள், ஒலுவில் பகுதி புத்திஜீவிகள், மற்றும் பொதுமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

அந்தப் பிரதேச மக்களின் நலன்களைப் பேணும் வகையிலும் அங்குள்ள வளங்களைப் பாதுகாத்து அபிவிருத்தி செய்கின்ற வகையிலும் துறைமுகத்தை மேம்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். குறித்த துறைமுகத்தை நாட்டின் முன்னேற்றத்திற்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பதைக் கண்டறிவதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும். அப்பணிகளை நிறைவு செய்து விரைவாக எமது இலக்கை அடைய வேண்டும்.

அண்மையில் இந்தியப் பிரதமரின் பதவியேற்பு நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்தியப் பயணம் வெற்றிகரமாக அமைந்தது. அது தொடர்பில் அமைச்சரவையிலும் ஜனாதிபதி கருத்துத் தெரிவித்தார். எமது நாட்டிற்கு வருமானம் ஈட்டும் வகையிலும், நாட்டில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு ஆயிரக்கணக்கில் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலும் ஜனாதிபதியின் பயணம் அமைந்திருப்பதாக நான் கருதுகின்றேன். அதேநேரம், இந்தியாவின் குறிப்பாக தமிழ் நாட்டு மீனவர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபடுவதும், சட்டவிரோத உபகரணங்களைப் பயன்படுத்துவதும் எமது கடல் வளங்களை அழிக்கிறது. அது மட்டுமன்றி எமது மீனவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகின்றது. எனவே இந்த, இலங்கை - இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இடையில் நிலவும் பிரச்சினை தொடர்பிலும் ஜனாதிபதி தனது இந்தியப் பயணத்தின்போது இந்திய தரப்பினருடன் கலந்துரையாடியுள்ளார்.

இந்தியப் பிரதமரும் வெளிவிவகார அமைச்சரும் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர். எனவே இந்த விடயம் குறித்து இரு நாடுகளும் இராஜதந்திர ரீதியில் கலந்துரையாடி தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். கடற்றொழிலாளர்களின் நலன்களை மேம்படுத்தும் வகையிலும் கடற்றொழில்துறை வளங்களைப் பாதுகாக்கும் வகையிலும் நாம் கடற்றொழில் தொடர்பான புதிய சட்டமொன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம். துறைசார் நிபுணர்கள் மற்றும் கடற்றொழிலாளர்களின் கருத்துகளைப் பெற்றுக்கொண்டு இந்தச் சட்டத்தை மிக சிறப்பான முறையில் தயாரித்து நாடாளுமன்றத்தில் முன்வைக்கவுளெதால் அதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன். மேலும் கடற்றொழில்துறை தொடர்பான நியதிச்சட்டங்களைத் தயாரிக்கவும் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

தற்போது எரிபொருள் விலையேற்றத்தால் மீனவர்கள் மாத்திரமன்றி நுகர்வோரும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் மானியங்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். இது தொடர்பில் ஜனாதிபதியிடம் கலந்துரையாடி வருகின்றோம். அதேநேரம், நன்னீர் மீன்வளர்ப்பு, நீர் முகாமைத்துவம் குறித்தும் விசேட அவதானம் செலுத்தி வருகின்றோம்.

1985ஆம் ஆண்டுக்குப் பிறகு வன ஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்புத் துறைக்கு பெற்றுக்கொண்ட காணிகளை மீளவும் குறித்த மக்களுக்கே வழங்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் கருத்தின் பிரகாரம், காணிகள் விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளரின் தலைமையில் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் உட்பட வடக்கின் ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்த அரச அதிபர்கள் மற்றும் துறைசார் நிறுவனங்களின் செயலாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்று விரைவில் நடைபெறவுள்ளது.

இலங்கையில் உள்ள 15 கடற்றொழில் மாவட்டங்களுக்கும் நான் பயணம் செய்து, அந்தப் பிரதேச மீனவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றைத் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றேன். எதிர்காலத்தில் எமது நாட்டுக்கு சிறந்த தலைவர் ஒருவரைத் தெரிவுசெய்யவேண்டும் என்று எனது பயணங்களின்போது அப்பிரதேச மக்கள் என்னிடம் தெரிவித்து வருகின்றனர்.

கடந்த காலங்களில் நிலவிய பொருளாதார நெருக்கடி, பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான வரிசை யுகம் என்பனவற்றைத் தீர்த்து மக்களின் இயல்பு வாழ்க்கையை மேம்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார். எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கே தமது ஆதரவை வழங்கி அவருடன் இணைந்து தொடர்ந்து பயணிக்க அவர்கள் தயாராகவுள்ளனர் எனவும் என்னிடம் தெரிவித்தனர் என்றார்.

## பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அத்தியட்சகராக திவாகர்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அத்தியட்சகராக வைத்திய கலாநிதி யோகேஸ்வரன் திவாகர் நியமிக்கப்பட்டு கடந்தவாரம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இலங்கை மருத்துவ நிர்வாகத்துறையில் கனிஷ்ட தர நேர்முகப் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில் முதன்மைச் சித்தி பெற்றே இவர் இந்த நியமனத்தைப் பெற்றுள்ளார்.

மருத்துவத்துறையில் இளமாணிப் பட்டப்படிப்பை முடித்த இவர், தொடர்ந்து முதுவிஞ்ஞானமாணி பட்டத்தை முடித்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பலவருடங்கள் சிறப்பான சேவையாற்றி வைத்திய நிபுணர் (நிர்வாகக் கற்கை) முடித்து சர்வதேச பயிற்சிக்கு செல்லவுள்ள நிலையில் கனிஷ்ட தர மருத்துவ நிர்வாக நேர்முகப் பரீட்சையில் இவருக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு வைத்திய அத்தியட்சகராக நிரந்தர நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர் அங்கு பதவியேற்றதும் பல்வேறு அபிவிருத்திப் பணிகளை உடனே ஆரம்பித்துள்ளார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (05)

## மாணவருக்கான ஜனாதிபதி புலமைப் பரிசில் ஜூன் 19 கொழும்பு மாவட்டத்தில் முதல் நிகழ்வு

*ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டத்தின் கொழும்பு மாவட்ட புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு, ஜூன் 19 ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.*

*ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக, பொருளாதார சிரமங்களோடு கல்வி மற்றும் இணைப்பாடவிதானங்களில் விசேட திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்கள், தமது கல்வியைத் தொடர்வதற்காக ஜனாதிபதி புலமைப் பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.*

*க.பொ.த உயர்தரம் கற்கும் மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 6000 மாணவர்களுக்கு மாதாந்தம் 6000 ரூபா வீதம் 24 மாதங்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது. இதற்கமைய கொழும்பு மாவட்டத்திற்கு 242 புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. அவர்கள் அனைவருக்கும் நிலுவைத் தொகையுடன் புலமைப்பரிசில் வழங்கப்படும்.*

*ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் தரம் 01 முதல் தரம் 11 வரையான 100,000 பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கும் திட்டத்தின் படி, கொழும்பு மாவட்டத்தில் சுமார் 5,000 புலமைப்பரிசில்கள் வழங்கப்பட உள்ளன.*

*ஏற்கனவே வலயக் கல்வி அலுவலகங்களால் ஜனாதிபதி நிதியத்தில் சமர்ப்பிக்கப்பட்ட புலமைப்பரிசில் வழங்கத் தகுதிபெற்றவர்களின் பட்டியலின்படி, கொழும்பு மாவட்டத்தில் உள்ள 396 பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட 1758 மாணவர்களுக்கு நிலுவைத் தொகையுடன் புலமைப்பரிசில்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.*

*விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட தொலைபேசி எண்களுக்கு தொலைபேசி அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் மூலம் புலமைப்பரிசில் பெறுவது குறித்த தகவல்கள் அறிவிக்கப்படும்.*

*இது தொடர்பான மேலதிக தகவல்கள் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் இன்னும் சில தினங்களில் வெளியிடப்படும். எவ்வாறாயினும், கொழும்பு மாவட்டத்தில் உள்ள புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு, நிலுவையில் உள்ள புலமைப்பரிசில் தொகை இன்னும் ஒரு சில தினங்களில் வங்கியில் வைப்பிலிடப்பட்டு, அந்தந்த புலமைப்பரிசில் பெறுபவர்களுக்கு குறுந்தகவல் மூலம் அறிவிக்கப்படும்.*

*இதற்கு இணையாக ஏனைய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு எதிர்காலத்தில் மாவட்ட மட்டத்தில் புலமைப்பரிசில் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

## ஆசியாவின் முதல் ஈரநிலப் பூங்கா மாநாடு ஜூன் 17 முதல் 21 வரை பத்தரமுல்லையில்

*சர்வதேச ஈரநிலப் பூங்கா ஒன்றியத்தின் பங்களிப்புடன் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் ஆசியாவின் முதல் மாநாடு ஜூன் 17 முதல் 21 வரை பத்தரமுல்லை தியசரு பூங்காவில் நடைபெறவுள்ளது என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ். சத்யானந்தா தெரிவித்தார்.*

*இந்த மாநாடு குறித்த தெளிவூட்டும் ஊடகவியலாளர் சந்திப்பு, அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.*

*உலகெங்கிலும் உள்ள 15 நாடுகளில் உள்ள 60க்கும் மேற்பட்ட ஈர நிலப் பூங்காக்களில் இருந்து சுமார் 100 பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர். இலங்கை, கொரியா, மங்கோலியா, பிலிப்பைன்ஸ், ஜோர்டான், மியான்மார், நியூசிலாந்து, நேபாளம், ஜப்பான், அவுஸ்திரேலியா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், தாய்வான், இங்கிலாந்து ஆகிய 15 நாடுகள் மாநாட்டில் பங்கேற்கின்றன.*

*'சூழலுக்கு உகந்த சுற்றுலாவுக்கான ஈரநிலங்கள் மற்றும் ஈரநில மையங்கள்' என்பது இந்த ஆண்டு மாநாட்டின் கருப்பொருளாகும். ஈர நிலங்களின் பாதுகாப்பு மற்றும் நிலையான நிர்வாகத்தில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதும் மேம்படுத்துவதும் மாநாட்டின் நோக்கமாகும். ஈர நிலங்களைப் பாதுகாத்தல், அதனுடன் தொடர்புடைய பல்லுயிர் பாதுகாப்பு, சுற்றுச்சூழலில் சமநிலையை உருவாக்குதல் போன்றவற்றுக்கு முன்மாதிரி நாடாக இந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான பரஸ்பர அறிவைப் பரிமாறிக் கொள்வதே இதன் முக்கிய நோக்கமாகும் என்றும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.*

*இதன்போது கருத்துத் தரிவித்த மேல் மாகாண சுற்றுலா சபையின் தலைவர் சுகத்ஹேவா பத்திரன,*

*இயற்கைப் பேரழிவுகளிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், பல்லுயிர் பெருக்கத்துடன் நிலையான வளர்ச்சியை நோக்கிச் செயல்படுவதற்கும் பெரும் செலவுகளைச் சுமக்க வேண்டியுள்ளது. இந்த ஈர நிலங்கள் மூலம் சுற்றுலாத்துறையை எவ்வாறு மேம்படுத்துவது என்பதை அறிய வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு உள்ளது. இலங்கைக்கு வரும் அனைத்து சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கும் நாங்கள் முழு அனுசரணையை வழங்குகிறோம். மேல் மாகாணத்தில் உள்ள சுற்றுலா வலயங்களை பல்வகைப்படுத்தியுள்ளோம். அதன் மூலம் அன்னியச் செலாவணி நெருக்கடிக்குத் தீர்வைக் கொண்டு வரலாம் என்பது எமது நம்பிக்கை. அந்த சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மூலம், எமது நாட்டின் ஈரநிலங்களைப் பற்றி உலகுக்கு அறியச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.*

*அத்துடன், நிலையான சுற்றுலா அபிவிருத்தி தலங்கள் என்ற புதிய கருத்துரு தற்போது உலகம் முழுவதும் பிரபலமடைந்து வருகின்றது. இலங்கையில் முதன்முறையாக சீகிரிய பிரதேசத்தை சுற்றி இது அமுல்படுத்தப்படவுள்ளது. இது எதிர்வரும் ஜூன் மாதம் 21 ஆம் திகதி ஜனாதிபதியின் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது அவிசாவளை சீதாவக்க பிரதேசத்தில் இருந்து புகையிரதத்தில் வரும் ஊடகவியலாளர்கள் அப்பகுதியிலுள்ள தாவரவியல் பூங்காவிற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் எனவும் மேல்மாகாண சுற்றுலா சபையின் தலைவர் சுகத் ஹேவாபத்திரன மேலும் தெரிவித்தார்.*

காலைக்கதிர் Kalaikkathir



# நயினாதீவில் சஜித் கூடவே அங்கஜனும்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச செவ்வாய்க்கிழமை நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவிலுக்குச் சென்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார். அவருடன் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பிரான அங்கஜன் இராமநாதனும் உடன் இணைந்திருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி செயலாளர் உமாச்சந்திர பிரகாஷ் உள்ளிட்ட கட்சியின் அமைப்பாளர்கள் ஆலயத்திற்கு சஜித் பிரேமதாசவுடன் வருகை தந்திருந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச யாழ்ப்பாணப் பயணத்தின் ஒரு பகுதியாக அவர் நயினாதீவிற்கும் வந்திருந்தார்.

# குடிபோதையில் இளைஞனை காரால் மோதிய சந்தேகநபரான வைத்தியருக்குச் சரீரப் பிணை

(பாறுக் ஷிஹான்)

மோட்டார் சைக்கிளில் வீதியால் சென்ற இளைஞனை குடிபோதையில் காரில் சென்று மோதிவிட்டுத் தப்பிய சந்தேகநபரான வைத்தியரை 5 இலட்சம் ஷரூபாய் சரீரப் பிணையில் விடுவித்த நீதிவான், பாதிக்கப்பட்ட இளைஞனுக்கு 1 இலட்சம் ஷரூபாவினை இழப்பீடாக வழங்க வேண்டும் எனக் கட்டளையிட்டு எதிர்வரும் ஜூலை 31 வரை வழக்கினை ஒத்தி வைத்தார்.

வழக்கு திங்கட்கிழமை கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம்.சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் பொலிஸாரின் சமர்ப்பணம், வாதி, பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளின் சமர்ப்பணம் ஆகியவற்றின் அடிப்படையில் கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற வைத்தியசர் பேரிம்பராஜா பகிர்தன் (வயது-41) 5 இலட்சம் ஷரூபாய் சரீரப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். பாதிக்கப்பட்ட இளைஞனுக்கு 1 இலட்சம் ஷரூபாவினை இழப்பீடாக வழங்க வேண்டும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார்.

வழக்கு எதிர்வரும் ஜூலை 31 மறுவிசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது. சந்தேகநபரின் வாகன அனுமதி பத்திரம் காலாவதியாகி உள்ளமை, அபாய நிலையில் வாகனத்தை செலுத்தியமை, மது போதையில் சென்றமை, உள்ளிட்டவைக்காக வைத்தியருக்கு ஷரூபாய் 80 ஆயிரத்திற்கும் மேல் அபராதம் மறு வழக்கு தவணையில் விதிக்கப்பட வாய்ப்புள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



# மு.கா. தலைவர் புத்தளம் வருகை

(எம்.சியாஜ்)

சிறி லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஜூன் 9 புத்தளம், பாலாவி, நாகவில்லு பகுதிக்கு திடீரென வருகை தந்தார்.

இந்தப் பயணத்தின் போது, பாலாவி நாகவில்லுவில் உள்ள தொழிலதிபர் லாபீர் இல்லத்தில் கட்சியின் மூத்த உறுப்பினரான ஓய்வுபெற்ற கிராம சேவையாளர் றஹ்மத்துல்லா தலைமையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடனான உறுப்பினர்கள் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

கலந்துரையாடலில் ஜூன் 22 காத்தான்குடியில் நடைபெறவுள்ள கட்சியின் 31ஆவது பேராளர் மாநாடு சம்மந்தமாகவும் அதில் புத்தளம் மாவட்டத்தில் இருந்து கலந்துகொள்பவர்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. புத்தளம் மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளைகள் புனரமைப்பு, புனர்நிர்மாணம் சம்மந்தமான வேலைத் திட்டங்களை துரிதப்படுத்துமாறும் தலைவர் வலியுறுத்தினார். அத்தோடு அன்மையில் புத்தளம் மாவட்டத்தில் பெய்த கடும் மழை வெள்ளத்தில் நாகவில்லு பகுதியில் பாதிக்கப்பட்ட சிறு பாலங்களை மீளமைப்பதற்கான களப் பயணம் ஒன்றிலும் ஹக்கீம் ஈடுபட்டார்.

கட்சியின் அரசியல் உயர்பீட உறுப்பினரும் முன்னாள் வடமேல் மாகாண சபை உறுப்பினர் நியாஸ், கட்சியின் அரசியல் உயர்பீட உறுப்பினரும் புத்தளம் பிரதேச சபை வேட்பாளர் லரீப், கட்சியின் இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர் அர்ஷாத் , இளைஞர் காங்கிரஸ் முக்கியஸ்தரும் தொழிலதிபருமான இமாந், பாசில் மற்றும் ஏனைய கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள் இந்தச் சந்திப்புக்களில் கலந்து கொண்டனர்.

# இலங்கை கூலிப் படை தொடர்பில் ஜூன் 26, 27 ரஷ்யாவுடன் பேச்சு

இலங்கையின் முன்னாள் படையினரை ரஷ்ய இராணுவத்தில் கூலிப் படையாக இணைத்துக் கொள்வது குறித்து இரு தரப்பு பேச்சு ஜூன் 26, 27 ஆகிய நாள்களில் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்காக இடம்பெறும் பிரிக்ஸ் வெளிநாட்டு அமைச்சர்கள் அமர்வு - 2024 இல் கலந்து கொள்வதற்காக ரஷ்ய நாட்டிற்கு சென்றுள்ள அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி நேற்று ரஷ்ய நாட்டிற்கான வெளிநாட்டு அமைச்சர் செர்கெயி லெவ்ரோவ் இடையேயான இருதரப்பு கலந்தரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போது, சுற்றுலா, உயர் கல்வி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு போன்ற துறைகள் உட்பட இருதரப்பு தொடர்புகளை மேலும் முன்னேற்றுவதற்கு வெளிநாட்டு அமைச்சர்களும் இணங்கினர்.

இச்சந்திப்பின் போது, அமைச்சர் அலி சப்ரி, ரஷ்யா சமாதானப் படைக்கு இணைக்கப்பட்டுள்ள இலங்கை பிரஜைகள் தொடர்பான பிரச்சினைகள் குறித்து ரஷ்ய அயலுறவுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததுடன், அவர்கள் எதிர கொள்ளும் சிக்கல்களைத் தீர்ப்பதறகாக அவரின் ஒத்துழைப்பைக் கோரி இருந்தார்.

இதுகுறித்து அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய தலைமையிலான உயர்தரப்பு பிரதிநிதிகள் மற்றும் ரஷ்ய அரசின் பாதுகாப்பு பிரதி அமைச்சருடன் 2024 ஜூன் 26 - 27 ஆகிய திகதிகளில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள கலந்துரையாடலில் இப் பிரச்சினை முழுமையாக பரிசீலனை செய்யப்பட்டு, நிலைமையை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுப்பதற்கு உடன்பாடு எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## காணியை கையகப்படுத்த வந்த

# வனவள திணைக்கள அதிகாரிகளை திருப்பி அனுப்பி வைத்த பொதுமக்கள்



வவுனியா கதிர்வேலர் பூவரசங்குளத்தில் வனவள திணைக்களத்தினரால் காணிகள் எல்லையிட்டு அளவீடு செய்வதற்காக செவ்வாய்க்கிழமை வருகை தந்தபோது அங்கு குழுமிய பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்து அவர்களை திருப்பி அனுப்பினர்.

1997 ஆம் ஆண்டு கதிர்வேலர் பூவரசங்குளத்திலிருந்து போர் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் 2011 அப்பகுதியில் மீளக்குடியமர்ந்திருந்தனர்.

அவர்கள் வசித்த பிரதேசம் அனைத்தும் பற்றை காடுகள் நிறைந்ததாக காணப்பட்ட நிலையில் அவர்கள் குறித்த பகுதியை துப்புரவு செய்து விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த பகுதியில் வன வளத் திணைக்களத்திற்குரிய காணிகள் இருப்பதாக தெரிவித்து வனவள திணைக்களத்தினர் அளவீட்டுப் பணிகளை மேற்கொள்ள குறித்த கிராமத்துக்கு வருகை தந்திருந்தனர்.

பொதுமக்களுடைய வயல் நிலங்கள் மற்றும் தோட்டம் செய்கின்ற பகுதிகளையும் வனவளத்திற்கு உரியதாக அடையாளப்படுத்தி இருந்தமையினால் அதிகாரிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் அளவீட்டுப் பணிகளை மேற்கொள்ள இடம்தரவில்லை.

தமது கிராமத்துக்குரிய கிராம சேவையாளரை அழைத்து வருமாறும் அதன் பின்னரே அளவீட்டுப் பணியை மேற்கொள்ள அனுமதிப்போம் என்றும் தாம் விவசாயம் செய்யும் பகுதியை அளவீடு செய்ய அனுமதிக்க முடியாது எனவும் அவர்கள் இதன் போது தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் அங்கு வருகை தந்திருந்த வன வள திணைக்களத்தினர் தாம் செய்மதி ஊடாக பெறப்பட்ட அடையாளப்படுத்தப்பட்ட இடங்களை சரி பார்ப்பதற்கு வந்திருப்பதாகவும் தமது பணியை செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டனர்.

1985 ஆம் ஆண்டுக்கு பின்னர் வனமாக அடையாளப்படுத்தப்பட்ட இடங்களை ஜனாதிபதி விடுவிப்பதாக தெரிவித்துள்ள நிலையில் தற்போது தமது விவசாய நிலங்களையும் சேர்த்து வனவளத்துக்குரியதாக அடையாளப்படுத்துவதானது ஜனாதிபதியின் கருத்துக்கு மாறானது என்று தெரிவித்து அதிகாரிகளின் பணிக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனையடுத்து அதிகாரிகள் திரும்பிச் சென்றனர். (100)

# மொட்டு கட்சி உறுப்பினர்கள் ஐ.ம. சக்தியில் இணைவு

## சஜித் முன்னிலையில் அம்பாறையில் சம்பவம்



(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட மொட்டு கட்சி உறுப்பினர்கள் சிலர் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசா முன்னிலையில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டனர்.

இந் நிகழ்வு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி செயலக காரியாலயத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது .

ஐக்கிய மக்கள் சக்தியின் அங்கத்துவத்தை ஏற்றுக்கொண்டு சுமார் 30 பேர் இணைந்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி இணை தொகுதி அமைப்பாளரும், கல்வி அபிவிருத்தி சங்கத்தின் இணைப்புச் செயலாளரும், ஐக்கிய இளைஞர் சக்தியின் மாவட்ட செயலாளருமான வெள்ளையன் வினோகாந்த் விடுத்த அழைப்பை ஏற்று அம்பாறை மாவட்டத்திற்குரிய மொட்டு கட்சியின் பிரதிநிதிகளான தமன பிரதேச சபையைச் சேர்ந்த முன்னாள் உபதவிசாளர் வெனுர பிரகீத், நாமல் ஒய பிரதேச சபையைச் சேர்ந்த உறுப்பினர் டபிள்யூ .விஜேவந்த, உகன பிரதேச சபையைச் சேர்ந்த உறுப்பினர்.ரவீந்ர ருபசிங்க மற்றும் விமல வீர திசாநாயக்க முன்னாள் அமைச்சருடைய அமைச்சரவை ஊழியர்கள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஜானக கசும் உட்பட மொட்டு கட்சியினுடைய வேட்பாளர்கள், கிராமமட்ட தலைவர்கள், என சுமார் 30 அங்கத்தவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச முன்னிலையில் இணைந்து கொண்டனர்.

எதிர்கால ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இருக்கும் சஜித் பிரமதாசாவை வெற்றி பெறச் செய்யும் முயற்சியில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுவதாக அவர்கள் உறுதியாக கூறியுள்ளனர்.

அது மாத்திரம் இன்றி அம்பாறை மாவட்டத்தில் ஏனைய கட்சிகளில் அங்கத்துவம் வகிப்பவர்களையும் சஜித் பிரேமதாஸவுடைய வெற்றிக்காக களப்பணியில் ஈடுபட முயற்சிப்பதாகவும் உறுதியளித்துள்ளனர். உண்மையில் இந்த செயற்பாடுகளால் எதிர்கால ஜனாதிபதியாக சஜித் பிரேமதாச வருவது மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அமைப்பாளர் வினோகாந்த் இதன் போது தெரிவித்தார் எனவே ஏனையவர்களும் சஜித் பிரேமதாஸ கடந்த காலங்களில் ஜனாதிபதி பதவியோ பிரதமர் பதவியையோ ஏற்றுக் கொள்ளவில்லை என குறை கூறியவர்கள் அனைவருக்குமான ஒரு செய்தியாக தற்பொழுது இடம்பெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் உங்கள் வாக்குகளை சஜித் பிரமதாஸவுக்கு வழங்கி அவரை ஜனாதிபதி ஆகும் படியாகவும் மேலும் எமது நாட்டில் காணப்படக்கூடிய அடிப்படைத் தேவைகள் பொருள் விலை உயர்வுகள் ஏழைகளின் அன்றாட வாழ்க்கைச் செலவுகள் போன்ற காரியங்களில் இருந்து நாங்கள் அடுத்த கட்ட நகர்வை நோக்கி செல்ல வேண்டுமாக இருந்தால் நிச்சயமாக சஜித் பிரேமதாச ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதி ஆக வரும் பட்சத்தில் நாட்டு மக்களுக்கான சுபிட்சமான வாழ்வு நிச்சயம் மலரும் என்பதனையும் வலியுறுத்தியுள்ளார்.

# பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுதிட்டத்தின் கீழ் கிண்ணியாவில் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன

(எச் எம் ஹலால்தீன்)

கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மற்றும் கிண்ணியா நகர சபை, கிண்ணியா பிரதேச சபைக்கான பொருள்கள் விநியோகம் கிண்ணியா பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வில் திருகோணமலை மற்றும் கிண்ணியா பிரதேசத்திற்கான ஒருங்கிணைப்பு குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல். எம் அதாவுல்லா அவர்களின் 2024 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு ஒதுக்கீட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் விநியோகிக்கப்பட்டன.

இதன் போது தேசிய காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம் அதாவுல்லாவின் பிரத்தியேக செயலாளருமான டாக்டர் சியா, கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், கிண்ணியா பிரதேச செயலக கணக்காளர் எம். ரினோஸ், கிண்ணியா பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், பாடசாலை அதிபர்கள், நகர சபை, பிரதேச சபை செயலாளர் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இதன் போது காணிக்கான ஆவணங்களுக்கு விண்ணப்பித்து காணிக்கச்சேரிகள் மூலம் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான காணி அனுமதி பத்திரங்களும் விநியோகிக்கப்பட்டன. (05)

# போதை ஒழிப்பு தொடர்பில் தவறாளர்களுக்கான மத ரீதியான ஆலோசனை விழிப்புணர்வு நிகழ்வு

(ஹஸ்பர் ஏ.எச்)

திருகோணமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதியில் போதை ஒழிப்பு தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வொன்று செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இடம்பெற்ற குறித்த நிகழ்வை கந்தளாய் நீதிமன்ற சமுதாயம் சார் சீர்திருத்த பிரிவு மற்றும் பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

நீதிமன்றத்தால் போதை பொருள் பாவனைக்கு உட்படுத்தப்பட்ட தவறாளர்களுக்கான மத ரீதியான விழிப்புணர்வு தொடர்பில் மௌலவிகளால் விழிப்புணர்வூட்டப்பட்டது.

போதை பாவனை ஊடாக ஏற்படும் பாதகவிளைவுகள் குடும்பவன்முறைகள் தொடர்பிலும் உளவள ஆலோசனை தொடர்பிலான தெளிவூட்டல்களை பெண்கள் அபிவிருத்தி உதவியாளரும் உளலவளத் துனை ஆலோசகருமான நஸ்ரின் திலானி விரிவாக விழிப்புணர்வூட்டினார். இஸ்லாம் மார்க்கம் சொல்லும் விடயங்களை மத ரீதியான தெளிவுபடுத்தல்களை மௌலவி உரையாற்றினார்.

இதில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், சமுர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சித்திக், சமுதாயம்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் ஹம்சபாலன், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.பி.எம்.பஸ்மி உட்பட பலரும் கலந்து கொண்டனர். (05)



# கற்பிட்டியில் ஹோட்டல் துறையில் தொழில் வழிகாட்டல் செயலமர்வு

(எம்.சியாஜ்)

புத்தளம் ஹோட்டல் முகாமைத்துவ சர்வதேச கல்வி நிறுவனம் கற்பிட்டி பிரதேச செயலகத்தில் மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சியை திங்கட்கிழமை நடத்தியது.

கற்பிட்டி பிரதேச செயலகம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இந்த செயலமர்வு நடத்தப்பட்டது.

ஹோட்டல் முகாமைத்துவ கல்வி நிறுவனத்தின் நிபுணர்கள் குழு, ஹோட்டல் முகாமைத்துவ நுண்ணறிவு மற்றும் தொழில்சார் அறிவை ஆர்வமுள்ள மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். (05)

# ஐ.தே.கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளரானார் ஷராப்தீன்

(கே எ ஹமீட்)

*ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய கொழும்பு தேர்தல் தொகுதி அமைப்பாளராக கொழும்பு மா நகர சபையின் சிரேஷ்ட உறுப்பினர் ஷராப்தீன் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*கடந்த திங்கட்கிழமை ஐதேக தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற அமைப்பாளர் நியமன நிகழ்வின் போது ஜனாதிபதியும் கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்கவால் இந்நியமனம் வழங்கப்பட்டது.*

*ஐக்கிய தேசிய கட்சியின் மத்திய கொழும்பு அமைப்பாளர் பதவியை இதற்கு முன்னர் பழீல் ஏ கபூர், டாக்டர் கலீல் ரணசிங்க பிரேமதாச, ஜாபிர் ஏ காதர் சிரிசேன குரே மொஹமட் மஹ்ஷூப், முஜிபுர் ரஹ்மான் போன்ற அரசியல் பிரபலங்கள் வகுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.* *(05)*

# சுகாதாரப் பொருள்கள் மக்களுக்கு வழங்கல்

அண்மைக்காலமாக நிலவும் மோசமான காலநிலை காரணமாக களனி ஆறு பெருக்கெடுத்து ஓடியதால் இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடுகளை சுத்தப்படுத்துவதற்காக சுகாதார பொருள்கள் வழங்கும் நிகழ்வு நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த ரத்நாயக்க தலைமையில் களனியில் அண்மையில் இடம்பெற்றது.

அங்கு தலைவரினால் மக்களுக்கு சுகாதார பொருள்களை வழங்கப்பட்டன. (05)

# மாணவர்கள் எவ்வாறான ஆசிரியர்களை விரும்புவர்?

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் லயன் ரஜீவன் உரை

மாணவர்கள் நவீன 21 ஆம் நூற்றாண்டில் எவ்வாறான ஆசிரியர்களை விரும்புகின்றார்கள் மாணவர்களின் உள நிலைமைக்கு ஏற்றவாறு ஆசிரியர்கள் தமது கற்பித்தலை எவ்வாறு நிகழ்த்தவேண்டும் போன்ற விடயங்கள் தொடர்பாக கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபர் லயன் ஜெ.ரஜீவன் முதன்மைப் பேச்சாளராகக் கலந்துகொண்டு முதன்மை உரை நிகழ்த்தினார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கல்லூரி முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்விலேயே லயன் ஜெ.ரஜீவன் முதன்மைப் பேச்சாளராகக் கலந்துகொண்டார்.

21 ஆம் நூற்றாண்டு நவீன கல்வி முறைகள், கல்வித் துறையில் செயற்கை நுண்ணறிவின் முக்கியத்திவம், பிள்ளைகள் எப்படியான ஆசிரியர்களை விரும்புகின்றார்கள் போன்ற விடயங்களை முன்வைத்து அவரது பேச்சு அமைந்திருந்தது.

மதிப்பார்ந்த முதல்வர் சந்திரமௌலீசன் லலீசனின் தலைமையில் சிறந்த நேர்த்தியான கல்விச் செயற்பாடுகள் மிகச்சிறப்பாக இயங்குவதுடன் பன்முக ஆற்றல் கொண்ட ஆசிரியர்கள் வளர்த்தெடுக்கப்படுகின்றார்கள் என்று பாராட்டியதுடன், நிகழ்ச்சிகள் முற்று முழுதாக ஆங்கில மொழியில் நடைபெற்றமையுடன் சிறப்பான ஒழுங்கமைப்புடன் நடைபெற்றமை ஆசிரிய மாணவர்களின் பன்முகத் திறமையையும் தலைமைத்துவ ஆற்றலையும் வெளிப்படுத்தியிருந்தமை பாராட்டுக்குரியது.



நிகழ்வில் என்னை அறிமுகம் செய்து வைத்த ஆசிரிய கல்வியியலாளர் செல்வி அருள்லிங்கம் சுஜீபாவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் கலாசாலையின் சமூகத்திற்கும் முதல்வருக்கும் விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சம்பளம் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரில் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்







அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மன்னாரில் அதிபர்களும் ஆசிரியர்களும் இணைந்து நேற்று (புதன்கிழமை) பகல் 2 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் பேரணியாக வலயக்கல்வி பணிமனை வரை சென்று, வலயக்கல்வி பணிமனைக்கு முன்பு பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தை தொடர்ந்தனர்.

குறிப்பாக, 1996ஆம் ஆண்டு தொடக்கம் காணப்படும் ஆசிரியர், அதிபர் சம்பள முரண்பாடுகளுக்கு உடனடியாகத் தீர்வை வழங்க வேண்டும், வறிய மாணவர்களுக்கு சலுகை அடிப்படையில் கற்றல் உபகரணங்களை அரசாங்கம் வழங்க முன்வர வேண்டும் பாடசாலைகளில் பெற்றோர்களிடம் இருந்து பணம் அறவிடுவதை நிறுத்த வேண்டும் என்பது போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'இலவச கல்வியை உறுதி செய்', 'ஆசிரியர் அதிபர் சம்பள முரண்பாட்டின் மிகுதி மூன்றில் இரண்டு பங்கை கொடு', 'கல்விக்கான ஒதுக்கீட்டை அதிகரி' போன்ற பல்வேறு வாசகங்கள் குறிப்பிடப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் மட்டுமன்றி, ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர். (05)



## இனப்பிரச்சினைக்கு உங்களால்கூட தீர்வை வழங்க முடியவில்லையே

### அநுரவிடம் சைவ சமயத் தலைவர்கள் ஆதங்கம்

போரில் எந்த குற்றமும் செய்யாத பாடசாலை சிறுவர்கள், குழந்தைகள் குண்டு தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்து, யுத்தம் முடிவுக்கு வந்து இவ்வளவு ஆண்டுகளாகியும் நீங்கள் எல்லோரும் இணைந்து இன்னமும் இனப்பிரச்சினைக்கு தீர்வை வழங்க முடியவில்லையே என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அனுர குமார திஸாநாயக்கவிடம் சைவ சமயத் தலைவர்கள் ஆதங்கத்தை வெளியிட்டனர்.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ள அனுர குமார திஸாநாயக்க தலைமையிலான குழுவினர் செவ்வாய்க்கிழமை மாலை ஏழு மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்திற்குச் சென்று சந்திப்பில் ஈடுபட்டனர். இந்தச் சந்திப்பில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன் போது, நாட்டில் நீண்டகாலமாக நிலவும் இனப்பிரச்சினையை தீர்க்க ஜே.வி.பி. பங்காற்ற வேண்டும் என வலியுறுத்திய சைவ சமயத் தலைவர்கள், போரில் எந்த குற்றமும் செய்யாத பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள், குழந்தைகள் குண்டு தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்தபோது இடதுசாரி தலைவர்களாக இருந்த நீங்கள் ஏன் எதிர்ப்பை வெளியிடவில்லை என ஆதங்கம் வெளியிட்டனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விவகாரம் நீடித்து செல்லும் நிலையில் அதற்கு தீர்வு என்ன என கோரிய போது எனது சகோதரியும் காணமலாக்கப்பட்டவர் தான். எனக்கு அதன் வலி தெரியும். நாம் ஆட்சிக்கு வந்து அதற்கொரு தீர்வை காண்போம் என அனுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். வெடுக்குநாறிமலை உள்ளிட்ட பல இடங்களில் சைவ ஆலயங்கள் அழிக்கப்படும் நிலையில் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுகிறது.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாணாமல் இந்த நாடு ஒருபோதும் முன்னேறாது எனத் சைவ சமயத் தலைவர்கள் சுட்டிக்காட்டியபோது,

சமயத்தின் பெயரால் சண்டை பிடிக்கக் கூடாது எனத் தெரிவித்த அனுர குமார திஸாநாயக்க, நாம் ஆட்சிக்கு வந்தால் கீரிமலை ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் உள்ள அழிவடைந்த ஆலயங்கள் மீள புனரமைக்க நடவடிக்கை எடுப்போம் எனவும் தெரிவித்தார். ஜனாதிபதி தேர்தல் களம் சூடுபிடித்து தென்னிலங்கை வேட்பாளர்கள் வடக்கிற்கு வருகின்ற போக்கு அதிகரித்துள்ள நிலையில், இந்த சந்திப்பில் அனுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக எதையும் வெளிப்படையாக பேசவில்லை என்றும் அறியமுடிகிறது. (05)

## சித்தர் - அநுர விசேட சந்திப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்கவுக்கும் புளொட் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் இடையிலான சந்திப்பு செவ்வாய்க்கிழமை சித்தார்த்தன் எம்.பியின் கந்தரோடை இல்லத்தில் இடம்பெற்றது.

இந்தச்சந்திப்பில், தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பிமல் ரத்நாயக்க, தேசிய மக்கள் சக்தியின் மத்திய செயற்குழுவின் உறுப்பினரும் யாழ்.மாவட்ட அமைப்பாளருமான இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் புளொட் அமைப்பின் மத்திய குழு உறுப்பினர் கௌதமன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தார்கள்.

ஒன்றரை மணிநேரத்துக்கும் மேலாக நடைபெற்ற இச்சந்திப்பின்போது சித்தார்த்தன் கூறுகையில் -

தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக அதாவது அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக தங்களது கட்சி எடுத்துள்ள நிலைப்பாடு என்ன என்பது இதுவரை தெளிவுபடுத்தப்படவில்லை. ஆகவே, அதிகாரப் பரவலாக்கல் தொடர்பாக தெளிவான நிலைப்பாட்டை தமிழ் மக்களுக்கு நீங்கள் வெளிப்படுத்த வேண்டும்.

இணைந்த வடக்கு, கிழக்கை நீதிமன்றத்தினூடாக தனித்தனி மாகாணங்களாக பிரிப்பதற்கு பிரதான பங்காளியாக ஜே.வி.பி. கட்சி செயற்பட்ட விடயத்தில் எம் மக்கள் மத்தியில் இன்று வரை அதிருப்தி இருப்பதால் இவ்விடயத்தில் தேசிய மக்கள் சக்தியின் உறுதியான நிலைப்பாட்டை நீங்கள் வெளிப்படுத்தும் பட்சத்தில், உங்கள் கட்சி சம்பந்தமான தமிழ் மக்களது மனநிலையில் மாற்றம் ஏற்படலாம் எனத் தெளிவுபடுத்தினார்.

அதேவேளை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நியமிப்பதற்கு, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கத்துவம் வகிக்கின்ற ஐந்து கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளோம்.

சமூக மட்ட அமைப்புக்களும் அதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றன. தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக நாங்கள் முழுமையாக அவருடனேயே செயற்படுவோம் என்பதையும் சித்தார்த்தன் தெரிவித்தார்.

தொடர்ந்து, ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் காணப்படும் பிந்திய நிலைமைகள் பற்றி அங்கு கலந்துரையாடப்பட்டதோடு, எதிர்காலத்திலும் தொடர்ந்து சந்திப்புக்களை மேற்கொள்ள இரு தரப்பிலும் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. (05)

## வைத்தியர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிர் மாய்ப்பு

### யாழில் சம்பவம்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர் ஒருவர், வைத்தியசாலை விடுதிக்குள் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்று (புதன்கிழமை) வைத்தியசாலையில் நடந்தது.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் மகப்பேற்று விடுதியில் கடமையாற்றும் வைத்தியர் ஒருவரே உயிரை மாய்த்துள்ளார்.

உயிரிழப்புக்கான காரணம் தெரிய வராத நிலையில் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.(05)







## நீர்வேலி அத்தியார் இந்துவுக்கு சஜித் பிரேமதாஸ நேற்று வருகை

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று (புதன்கிழமை) நீர்வேலி அத்தியார் இந்து கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

இதன்போது கல்லூரியில் ஸ்மாட் வகுப்பறையை திறந்துவைத்து மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

அத்தோடு, ஒரு தொகுதி ஆங்கில, தமிழ் மொழிபெயர்ப்பு அகராதிகளை பாடசாலைக்கு எதிர்க்கட்சித் தலைவர் வழங்கிவைத்தார்.

மேலும், பாடசாலையின் நடன மாணவர்களின் உடைகளுக்காக ஒரு லட்சம் ரூபா பணத்தொகையும் வழங்கினார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.06.2024இல் வெளியிடப்பெற்றது